பக்கங்கள்-16 | 21.தை.2024 | விலை-50.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
திநப்பூயல்
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06



T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 430



## தமிழ்த்தேசியம் வென்றது - தமிழரசுக் கட்சியின் 17வது தலைவராக சிறீதரன் வெற்றிவாகை சூடினார்



## வடக்கில் படங்காட்டிய ஜனாதிபதி, கிழக்கில் படங்காட்டிய ஆளுநர் – நிலாந்தன்



## வடக்கு கிழக்கில் தொடரும் நில ஆக்கிரமிப்பு – அரசு திட்டமிட்டுச் செயற்படுகிறது

# தமிழ்த் தேசியம் வென்றது - தமிழரசுக் கட்சியின் 17ஆவது தலைவராக சிறீதரன் வெற்றிவாகை சூடினார்







தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கானத் தேர்தல் முடிவுகளை உள்ளூர் மற்றும் சர்வதேச நாடுகளில் புலம்பெயர்ந்துவாழும் தமிழ் மக்களும், தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் எதிர்பார்த்திருந்த சூழலில், வாக்கெடுப்பில் 184 வாக்குகளை பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனும், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் 137 வாக்குகளையும் பெற்றனர். அதனடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக வெற்றிவாகை சூடியுள்ளார்.

அதேநேரத்தில் தமிழ்த் தரப்பிலுள்ள கட்சிகளின் எதிர்பார்ப்பு என்னவென்றால் தமிழ்த்தேசியம் வெல்ல வேண்டும் என்பதே. அதற்கமைய தேசிய ரீதியிலான முன்னெடுப்புக்களை செயற்படுத்தி வந்த பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் அதே பாணியில் பயணிக்க, தமிழ்த் தேசியம் என்கிற பாணியில் சிறீதரன் அவர்கள் பயணிக்கத் தொடங்கினார். இதன் காரணமாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தலைவர் போட்டியில் இருந்தும் விலகிக்கொண்டார். ஒரு கட்டத்தில் சுமந்திரன் அவர்களே தமிழரசுக் கட்சியின் தலைவராக வருவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தேர்தலில் இறுதிநாள் முடிவு அல்லது இறுதி மணித்தியாலங்களின் முடிவு மாற்றத்தை ஏற்படுத்தியது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஏற்கனவே சுமந்திரன் அவர்கள் தனது தலையீட்டினால், ரணில் அரசுடன் இணைந்து பிளவடையச் செய்தார் என்கிற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அவர் மேல் சுமத்தப்பட்டிருந்தது.

பேரினவாதிகளின் ஆசியுடன் கூட்டமைப்பிற்குள் சுமந்திரன் அனுப்பி வைக்கப்பட்டதன் இலக்குகள்

1. தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் தேசிய நீக்க அரசியலை முன்னெடுத்துச் செல்லல்.
2. தமிழ் மக்கள் நேசித்த விடுதலைப் போராட்டத்தையும் விடுதலைப் புலிகளையும் கொச்சைப்படுத்துதல்.
3. தமிழ் தேசிய கூட்டமைப்பை பிளவு படுத்தல்.
4. தமிழரசு கட்சியை உடைத்தல்.

இவற்றை குறிவைத்து இயங்கி வந்த சுமந்திரன் இன்று தலைமை பதவிக்கான போட்டியில் தோல்வியினைக் கண்டுள்ளார்.

தன்னை அரசியலுக்கு அழைத்து வந்த சம்பந்தனின் காலையும் வாரிவிட்டார் சுமந்திரன். சுமந்திரன் தலைமை பதவிக்கு வருவதை சம்பந்தனும் விரும்பவில்லை. கடந்த தேர்தலில் சுமந்திரனின் வெற்றி வாய்ப்பு கேள்விக்குறியாக இருந்தபோது சிறீதரனின் கிளிநொச்சி அலுவலகத்திற்கு நேரில் சென்று அவரை சந்தித்து அவருடைய ஆதரவையும் கோரினார்.

இன்றுவரை தமிழரசு கட்சி சார்பில் வடக்கில் ஒவ்வொரு முறையும் சிறீதரனே அதிக விருப்புவாக்கை பெற்று வருகின்றார். ஆகவே சிறீதரனின் ஆதரவு கிடைத்தால் அவருக்கு வாக்களிப்பவர்கள் விருப்பு வாக்குகளில் ஒன்றை தனக்கு வழங்குவார்கள் அதன் மூலம் தனது வெற்றி உறுதி செய்யப்படும் என்று நம்பினார். இருந்தபோதும் இறுதியில் ஏனைய வேட்பாளர்கள் வெளியே காத்திருக்க வாக்களிப்பு நிலையத்திற்கு உள்ளே சென்று "டேய் கள்ளா" என்கிற பட்டப் பெயரையே கேட்க முடிந்தது.

"சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது மீண்டும் அதனை கோர முடியாது"
"விடுதலை புலிகளின் பலவந்த ஆட் சேர்ப்பு, போர்க்குற்றங்கள் பற்றி விசாரணை வேண்டும்"
"விடுதலை புலிகளின் இனசுத்திகரிப்பை எண்ணி தலை குனிகின்றேன்"
"போரில் கொல்லப்பட்ட இராணுவத் தினரையும் சேர்த்தே நினைவு கூருகின்றோம்" ஆகியன இவரது பிரபல அரசியல் கூற்றுக்கள்.

நல்லாட்சி அரசில் நம்பிக்கை உள்ளது. ஓ.எம்.பி அலுவலகம் நல்லது என்று ரணிலை அரசை பிணையெடுத்தமை.
வட மாகாண சபையில் தனது பேச்சையும் மீறி இனப்படுகொலை தீர்மானம் நிறைவேற்றிய விக்கிக்கு எதிராக தனது சகாக்கள் மூலம் குழப்பங்களை ஏற்படுத்தியமை.
யாழ் மாநகர சபை மேயர் தெரிவின் போது தனது கட்சி வேட்பாளரையே சதி செய்து தோல்வியுற செய்தமை.

இதுபோன்ற பல காரணங்களால் தான் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கான போட்டியில் பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரன் அவர்களால் வெற்றி பெற முடியாமல் போனது எனவும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

குறிப்பாக இங்கே கள்ள வாக்குகளை அளிக்க முடியாத காரணத்தினால் நேர்மையான முறையில் வாக்குகள் பெறப்பட்டு எண்ணப்பட்டதன் அடிப்படையில் இத்தேர்தல் ஜனநாயக ரீதியாக நடைபெற்றது.

இந்தத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் 94 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். கிளிநொச்சியில் 23 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். முல்லைத்தீவில் 28 பேரும், மன்னாரில் 27 பேரும், வவுனியாவில் 23 பேரும், திருகோணமலையில் 37 பேரும், மட்டக்களப்பில் 60 பேரும், அம்பாறையில் 38 பேரும், கொழும்பில் 08 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்ததன் படி, மொத்த வாக்குகள் 338. இதில் சிறீதரன் அவர்கள் பெற்ற வாக்குகள் 184. சுமந்திரன் அவர்கள் பெற்ற வாக்குகள் 137 ஆகும். அதனடிப்படையில் 47 வாக்குகள் வித்தியாசத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அவர்கள் வெற்றி பெற்று தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ் வெற்றிக்குப் பின்னர் முன்னாள் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கருத்துத் தெரிவிக்கையில், கட்சியினுடைய ஒரு தேர்தலில் ஜனநாயகப் பண்புகள் மலர்ந்திருக்கிறது. அதைவிட இருவரும் தேர்தல் காலத்தில் தனித்தனியாக கட்சியினுடைய தலைவர் பதவிக்குப் போட்டியிட்டாலும், ஒற்றுமையாகவும் ஒன்றாகவும் தமிழ் மக்களின் விடுதலைக்காக தாம் செயற்படுவோம் என்கிற வார்த்தைகளை இந்த தேர்தல் முடிவுக்குப் பின்னரும் எனக்கு முன்னால் மீண்டும் பேசியிருக்கின்றார்கள். இருவரும் கைகுலுக்கி கட்டியணைத்து தாங்கள் ஒன்றாகச் செயற்படுவோம் எனத் தெரிவித்திருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்க விடயம்.

இத்தேர்தலில் மக்கள் மிக உற்சாகமாக 321 வாக்காளர்கள் வாக்களித்திருக்கிறார்கள். பொதுக்குழு உறுப்பினர்கள் உற்சாகமாக இதில் பங்குபற்றி தங்களது வாக்குகளை வழங்கி ஜனநாயக பாரம்பரியத்தை உருவாக்கியுள்ளனர். சலிப்படைந்திருந்த மக்களுக்கு ஒரு உற்சாகத்தை இவரின் வெற்றி ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ்த் தேசியத்தை அடிப்படையாகக்கொண்ட அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து செயற்படவிருப்பதாக புதிய தலைவர் சிறீதரன் அவர்கள் பேசியிருக்கிறார். இதுவொரு நல்ல விடயம். இந்த வேலைத்திட்டத்தைத் தான் நாங்கள் செய்யவேண்டியிருக்கிறது. ஒற்றுமையாகச் செயற்படவேண்டும் என்று தனது வாழ்த்துச் செய்தியில் அவர் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான சூழலில் புதிதாக தெரிவுசெய்யப்பட்ட தமிழரசுக் கட்சியின் தலைவர் சிறீதரன் அவர்கள் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்கிற அடிப்படையில் வெற்றி பெற்றதையடுத்து கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் சபதம் எடுத்துக்கொண்டு, கட்சியின் தலைவராக பல சவால்களுக்கு முகங்கொடுக்க தயாராகியுள்ளார்.

அந்த அடிப்படையில் 28ஆம் திகதி முன்னாள் தமிழரசுக் கட்சியின் தலைவரினால் உத்தியோகபூர்வமாக அனைத்துவிதமான பொறுப்புக்களும் அவரிடம் வழங்கப்படவிருக்கிறது. அதன் பின்னர் அவரது கொள்கைப்பிரகடனத்தை தொடர்ந்து புதிய தலைவர் சிறீதரன் அவர்கள் எவ்வாறு தமிழரசுக் கட்சியினையும் அவர்களுடன் பயணித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்திருந்த கட்சிகளையும் உள்வாங்கிக்கொண்டு தமிழினத்தின் விடுதலைக்காக பயணிக்கப்போகிறார் என்பதே ஒரு சவால் நிறைந்த விடயமாக அமைகிறது.

சுமந்திரன் அவர்களுக்கும் சிறீதரன் அவர்களுக்குமிடையில் கடுமையான போட்டி நிலவியிருக்கிறது. தமிழ் மக்கள் தேசியத்தைப் பாதுகாக்க, தமக்கான வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை மீட்டெடுப்பதற்காகவே 22 பாராளுமன்ற உறுப்பினர்களை அன்று பாராளுமன்றம் அனுப்பிவைத்தனர். தமிழரசுக் கட்சியை தலைமைகொண்டு விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஒன்றாக இணைந்து தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்கவேண்டும் என்கிற காரணத்தினாலேயே தமிழரசுக் கட்சியின் தேர்தல் முடிவுகள் இறுதித் தருணத்தில் மாற்றியமைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் கணிசமானளவு வாக்குகள் சிறீதரன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதேநேரம், யாழ்ப்பாணத்தின் வாக்குகள் அவரை வெற்றிபெறச் செய்துள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் 28ஆம் திகதி கட்சியின் பதவிகளை ஏற்கும் சிறீதரன் அவர்கள் மத்திய குழு உறுப்பினர்களையும், செயலாளர், பொருளாளரை நியமிப்பது தொடர்பிலும் நடவடிக்கைகள் இடம்பெறவிருக்கின்றன. இதில் பழிவாங்கல்கள் எதுவும் இடம்பெறாது, ஜனநாயக வழியில் வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் என்கிற வித்தியாசமின்றி, தமிழரசுக் கட்சியை சிறந்த முறையில் கொண்டுசெல்ல அவர் அயராது பாடுபடவேண்டும் என்பதே இன்றைய நிலைப்பாடாக இருக்கிறது.

**இரணியன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

# தமிழரசுக் கட்சியின் தலைவரும், சவால்களும்

இதுவரை காலமும் தமிழரசுக் கட்சியின் தலைவராக பதவியில் இருந்த மாவை சேனாதிராஜா அவர்களின் பதவிக்காலம் நிறைவுபெற்றுள்ளது. புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீதரனும், சுமந்திரன் அவர்களும் போட்டியிட்டனர். இதில் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அவர்கள் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவருக்கு தினப்புயல் பத்திரிகை நிறுவனம் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவிக்கும் அதேநேரம், அவர் முன் இன்று பல விடயங்கள் சவாலாக எழுந்து நிற்பதை நாம் புதிதாக அவருக்கு நினைவூட்டவேண்டியதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் இதுவரை காலமும் அங்கம் வகித்து வந்த கட்சிகளான ரெலோவும் புளொட்டும் இன்று தனித்து நிற்கிறது. கூட்டமைப்புக்குள் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எப். கூட்டமைப்புக்குள் இருந்த பலர் இன்று தனித்தனியாகக் கட்சிகளையும் உருவாக்கியுள்ளனர். இத்தகையதொரு சூழலில் திரு.சம்பந்தன் அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்கிற பதவியை இழந்துள்ளார். இன்று தமிழரசுக் கட்சி மாத்திரம் தான் தனித்து நிற்கிறது.

தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளால் ஏற்பட்ட அதிருப்தியின் காரணமாகவே தாம் விலகி நிற்பதாக ரெலோவும் புளொட்டும் கூறியிருக்கின்றன. சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களும் இதனையே தெரிவித்திருந்தார். இச் சூழலில் தான் புதிய தலைவரான சிறீதரன் அவர்கள் இந்த விடயத்தில் ஒற்றுமை குறித்து வலியுறுத்திக் கூறியுள்ளார். முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜாவும் ஒற்றுமை குறித்துப் பேசியுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து சுமார் 15 வருடங்கள் ஆகிவிட்டபோதிலும் தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கவில்லை. இன்றும் போராட்டங்கள் வீதியோரங்களில் தொடர்கின்றது. சர்வதேச சமூகங்களும் தமிழ் மக்கள் விடயத்தில் பாராமுகமாகவே இருக்கின்றன. முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு நீதிகேட்டுப் போராடிய பலர் இன்று எம் மத்தியில் இல்லை. தமது உறவுகளைத் தேடித்தேடி அலைந்து திரிகின்றனர். முன்பை விட தற்போது எந்தவிதப் பயமும் இல்லாமல் அரசின் நிகழ்ச்சிநிரல் தமிழர் தாயகப் பகுதிகளில் வேகமாக நடைபெறுகின்றது. நில அபகரிப்பும், பௌத்த விகாரைகளை அமைப்பதிலும் அவர்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தகைய அரசின் தன்னிச்சையான செயற்பாடுகளுக்கு மத்தியில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ்ப் பிரதிநிதிகளை, தமிழ் மக்களை ஏமாற்றும் வேலைகளையே செய்துவருகிறார். தமிழ்க் கட்சிகள் பலவாறாக சிதறுண்டு கிடக்கின்றன. கருத்து மோதல்களும், உட்கட்சி விவகாரங்களும், குழிபறிப்புக்களும், சுயநலப் போக்கும் மலிந்துபோயுள்ள இன்றைய நிலையில், இதுவரை காலமும் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த சிறீதரன் அவர்கள், இன்று பலம் வாய்ந்த கட்சி ஒன்றின் தலைவராக வந்துள்ள சூழலில், அடுத்துவரப்போகின்ற நாட்கள் அவருக்கு முன்னரைவிட சவால்கள் நிறைந்ததாகவிருக்கும். ஒற்றுமைதான் தமிழினத்தின் விடுதலைக்கான பாதையின் முதற்படி என்பதை நினைவிற்கொண்டு அனைவரினதும் செயற்பாடுகள் அமையப்பெறவேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.



29

## பல்துறை எழுத்தாளர் புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்

அன்றும் வழமை போல, கச்சேரியின் ஒரு பக்கத்தில் 'டோக்கனும்' மற்றுமொரு பக்கத்தில் 'கிளியரன்சும்' பிறிதொரு பக்கத்தில் 'டிக்கட்டும்' - வழமையான செயற்பாடுகள் நடந்தன. அன்று மழை வருவது போல இருந்தது. மழைக்குருவிகள் தாழ் வானத்தில் பறந்தன. கப்பலில் பயணிக்கும் ஒரு பயணி 9 1/2 போத்தல் சாராயம் அடங்கலாக, 30 Kg வரை கொண்டு செல்ல இலங்கை சட்டத்தில் - அரசாங்கத்தில் - அனுமதியுண்டு.

பல்கலைக்கழகத்திற்குப் படிக்கச் செல்லும் மாணவர் - மாணவிகள் தங்களுடைய ஆடைகளும் கொஞ்சம் தீன்பண்டங்களுமாக 10 – 15 Kg பாரம் கூட தேறாது. 2000ங்களில் யாழ்ப்பாணத்தில் 'வீ.எஸ்.ஓ' (VSO) சாராயம் மிகவும் 'டிமான்' டாக இருந்தது. யாழ்ப்பாணத்தின் அடிவருடிகளாக தொழிற்படும் சாராயக்கடை முதலாளிமார்கள், முகவர்கள் சிலரை வைத்து நுட்பமான முறையில் கப்பலினூடாக சாராயத்தைக் கொண்டு வருவர். சிலர் ஆமி பொலிசுக்கு கையூட்டுக் கொடுத்தும் சாராயம் கடத்தினர்.

சாராய முகவர்கள் ஒவ்வொரு மாணவனிடமும் தனித்தனியே உரையாடி, மாணவர்கள் கொண்டு செல்லும் சாராயத்திற்கு ஏற்ப, முற் கூட்டியே கூலியைக் கொடுப்பார்கள். (ஐந்து போத்தல்களுக்கு 2000 ரூபாயும் ஐந்து போத்தல்களுக்கு மேல் 4000 ரூபாயும் கூலி. இல்லாவிடின், முறையே ஒரு VSO போத்தலும் இரண்டு VSO போத்தல்களும் கூலி)

சாத்துக்கு அந்த இடத்திற்கு இரண்டாம் நாள் - சற்று பரிச்சயமாக இருந்தது. முதல் நாள் கண்ட முகங்கள் இடையிடையே பூத்தன. அறிமுகம் இல்லாத மாணவர்கள் கூட்டங்கள் சாத்தைக் கண்டு மந்தைக் கூட்டத்திற்குள் ஓநாய் புகுந்து விட்டதைப் போல பார்த்தது. எல்லா விடயத்தையும் முன் கூட்டி அறியும் ஆற்றல் உடையவனுக்கு தன்னுடைய உயிருக்கு ஆபத்தான விடயத்தை அறியவில்லை என்பது கொஞ்சம் மன வேதனையை யாருக்குத்தான் அளிக்காது. அங்கு நின்ற மாணவர்கள் சிலருக்கு சாத்தின் கடித விவகாரம் தெரியாது. தெரியும் மட்டும் அவர்களுக்கு எதிரியாக தென்பட மாட்டான் - சற்று சந்தோசந்தான்.

தங்களுடைய கோப்புக்களுடன், வின்சனும், முரளியும், ஜெயப்பிரகாசும் இன்னும் மாணவ - மாணவிகள் பலரும் தங்களை மறந்து புன்னகையுடன் வந்தனர். அந்த கூட்டத்தைக் கண்டதும் சாத்தின் முகம் அற்றலர்ந்த பாரிஜாத புஸ்பம் போல மலர்ந்தது. தெரிந்தவர்களைக் கண்டால், யாருக்குத்தான் பூரிப்பு ஏற்படாது. சாத் மட்டும் என்ன விதி விலக்கா? சாத்தைத் தூரத்தே கண்ட மாணவர் கூட்டம் தங்களுக்குள் இரகசியம் கதைத்துக்கொண்டு, சாத்துடன் நேற்று கதைத்தவர்களைத் தவிர ஏனையோர் எல்லாம் பிரிந்து சென்றனர். சாத்துக்கு சிறிது ஐயம் துளிர்விட்டது. நண்பர்கள் சிரித்து கதைத்ததும் கருகிவிட்டது.

நால்வரும் ஒன்று கூடுகின்றனர். மூவர் நீண்ட கால நண்பர்கள். சாத் மட்டும் நேற்று பெய்த மழைக்கு முளைத்த காளானாக செயற்படாமல், பச்சோந்தியாக செயற்பட்டான். அவனை பச்சோந்தி எனக் குறிப்பிட்டதும் நீங்கள் சற்று குழப்பம் அடைந்திருக்கலாம். பச்சோந்தி தான் இருக்கும் இடத்தில் சூழலுக்கு ஏற்பத் தன் தோலின் நிறத்தை மாற்றிக்கொள்ளும் இயல்பைக் கொண்ட ஒரு வகை ஓணான். பழைய இலக்கியங்கள் தொடக்கம் நவீன இலக்கியங்கள் வரை பச்சோந்தி - இழிவாகவே பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது. இங்கு சாத்தின், பச்சோந்தித் தனமும் மற்றவர்களைச் சந்தேக கண்ணோட்டத்துடன் நோக்காமையும், அவனுடன் கூடவே இருக்கும் கடிதத்தினால், போகும் இடத்தில் உயிருக்கு ஆபத்து அறிய தவறிவிட்டான். அவனுக்கு ஏற்பட்ட முதலாவது சந்தேகம் அவனை பச்சோந்தியாக்க அத்திபாரம் இட்டது. சூழலின் - மனிதனின் - இயல்புக்கு ஏற்ப மற்றவர்களுக்குத் தீங்கு இல்லாமல் இயன்ற வரை உதவியாகவும் செயற்பட்டு வாழ்வதில் என்ன பிழை? இந்தக் கடிதத்தின் விவகாரம் சாத்தை சமூகத்தையும் இயற்கையையும் இணைக்கும் பிரஜையாக மாற்றுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்?

இங்கு சாத் பச்சோந்தியாக வாழப்போகின்றான் - நாம் எல்லோரும் கருதும் பச்சோந்தி அல்ல. இது வரை கட்டுக்கோப்புடன் வாழ்ந்த சாத்துக்கு சின்ன வயதில் உள்ளாகிய சிறுவர் துஷ்பிரயோகங்களின் பிரதிபலிப்புக்கள் தானோ வளர்ந்தும் செல்வாக்குச் செலுத்துகின்றதோ? வினா சாமானிய மனிதர்களுக்குக் கூட எழும்.

நால்வரும் கூடினார்கள். சாத் மூவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்தான். பதிலுக்கு மூவரும் ஒரே நேரத்தில் வணக்கம் கூறினார்கள். எல்லோரும் சந்தோசமாக தங்களுக்குள் உரையாடினார்கள்.

"என்ன மச்சி இண்டைக்கு 'டிக்கட்' கிடைக்குமா? இல்லாட்டி பிள்ளையார் கதைதானா?" - கிண்டலாக சாத்தைப் பார்த்து கேட்டான், முரளி.

"நானும் இப்பதானே உங்கள மாதிரி வந்திருக்கன்."
"உனக்கு சிலவேளையில் தெரிந்திருக்கும். நீ 'மினிஸ்ரரிட ஆள்தானே"
"உனக்கு எல்லாம் பகிடிதான்"
"நேற்று உங்கட 'ஒப்பிசில்' போய் கேட்டாயா?" - பல பல அர்த்தங்களோடு வினாவைத் தொடுத்துவிட்டு வின்சனையும் ஜெப்பியையும் பார்த்து நக்கலாக சிரித்தான்.

"போனான் அது பெரிய கதை."
வஞ்சக சூது இல்லாமல் கூறினான்.

"ஆ...ஆ...ஆ...அப்ப உனக்கு இண்டைக்கு 'டிக்கட்' தான். யாழ்ப்பாணத்திலையும் ஒரு 'டிக்கட்' 'ரெடி' இப்பவே காத்திருக்கு." சிலேடையாக கதைத்தான், முரளி.

"அங்க போனது 'டைம்' 'வேஸ்ட்'"
"பார்டா பார்டா நடிக்கிறான்" - முரளி சிரித்தான்.



வின்சனும், ஜெப்பியும் "அட முரளி சாத்த பாக்க பாவமா இருக்கு சும்மா அவனோட பகிடி பண்ணாத" என்றனர்.
"உனக்கு முரளி எல்லாம் பகிடிதான். அங்க போய் பல மணி நேரம் காத்திருந்து, கடைசியில் நேற்று நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சிக்குப்பட பாத்தன்"
"நீதானே கட்சிக்காரனே"
"என்ன கட்சிக்காரன்?"
"கடிதத்தில் காட்டினாயே. அதை அங்கையும் காட்டியிருந்தா முன்னுரிமை கொடுத்திருப்பாங்க."
"நான் கட்சியும் இல்லை கிச்சியும் இல்லை. சாதாரண மனிதன்தான். வவுனியாவில் எல்லாரும் உதவி கேட்டு போனாங்க. நானும் போய் உதவி கேட்க, அவங்கள் கட்சிக்காரன் மண்ணாங்கட்டிக்காரன் - எழுதினதற்கு நானா பாடு. நீ செல்லுற மாதிரி கடிதத்தைக் காட்டினனான். பொறுப்பாளர், "கெம்பஸ் பொடியள் யாரையும் தான் நம்புறதில்லையாம்.' - 'போம்' ஒன்றைத் தந்து நிரப்பி கொடுக்க சொன்னார்" பெயரைத் தாங்கள் கச்சேரிக்கு அனுப்புவோம் என்றார். என்னால், முடிஞ்சவரைக்கும் முயற்சி செய்திருக்குப் பாப்போம்"

"உன்னைப் பார்க்க பத்து நாள் சாப்பிடாத வையாபுரி மாதிரி இருக்கு. எப்படியும் இண்டைக்கு நாளைக்கு வராட்டியும் காசு கட்டாம எடுக்கலாம்." - சாத்தின் தோற்றத்தைக் கிண்டல் பண்ணி, அவனது பேச்சில் ஓர் அளவுக்கு நம்பிக்கை கொண்டு கூறினான்.

இந்த கட்சியின் கடிதத்தைச் சமூகம் கண்டால், கடிதம் வைத்திருப்பனை எந்த கண்ணோட்டத்தில் நோக்கும் என்பதை முரளியும் சாத்துக்கு தெரிவிக்க மறந்துவிட்டமை சாத்தை இன்னும் இன்னும் எதிர்காலத்தில் பல சவால்களுக்கு முகம்கொடுக்க வித்திட போகின்றது என்பதை இவ்விடத்தில் நால்வரும் அறியாமை இருப்பது இவர்களின் விளையாட்டுப் புத்தியைக் காட்டுகின்றது.

நால்வரும் கூடி நின்ற இடத்தை நோக்கி, VSO முகவர் ஒருவன் வந்தான். அவர்களைப் பார்த்துப் புன்னகித்தான். பதிலுக்கு அவர்களும் புன்னகித்தார்கள்.

"என்ன தம்பிமாரே, 'டிக்கட்' கிடைக்க வில்லையா?"
"இல்லை" - மூன்று நண்பர்களின் பதிலும் "கிடைக்கும்போது கிடைக்கும்" சாத்தின் பதிலும் ஒன்றுடன் ஒன்றாக சங்கமமாகி, "இல்லை, கிடைக்கும் இல்லை, போது இல்லை, கிடைக்கும்" என எழ முகவரின் காதுகளுக்கு எட்டியது. அவன் அவ்வாறு நூறு மாணவர்கள் பதில் சொல்லும்போதே கிரகித்துப் பழகிப்போன ஆற்றலை உடையவன் - இவர்களுக்கு 'டிக்கட்' கிடைக்கவில்லை - பதிலைக் கிரகித்துக்கொண்டான்.

"தம்பிமார் ஆளுக்கு ஆள் ஒன்பதரை VSO போத்தல் கொண்டு வந்து தாறீங்களா? ஒவ்வொரு தலைக்கும் 4000 ரூபாய் வீதம் தாறன்.

# வடக்கில் படங்காட்டிய ஜனாதிபதி கிழக்கில் படங்காட்டிய ஆளுநர்



புதிய ஆண்டு பிறந்த கையோடு ஜனாதிபதி வடக்கிற்கு வருகை தந்த அதே காலப்பகுதியில், அவருடைய ஆளுநர் கிழக்கில் மிகப்பெரிய பண்பாட்டு விழா ஒன்றை அரங்கேற்றியிருக்கிறார்.

வடக்கில் ஜனாதிபதி பல்வேறு தரப்புகளையும் சந்தித்தார். தொழில் முனைவோர், பல்கலைக்கழகப் பிரமுகர்கள், குடிமக்கள் சமூகம் என்று சொல்லப்பட்டவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், இசைத்துறையில் விளையாட்டு துறையில் பளுதூக்கும் போட்டியில் சாதனை புரிந்தவர்கள். வடக்கில் கல்விப் பெறு பேறுகளில் சாதனை புரிந்தவர்கள், அரச உயர் அதிகாரிகள், தனது கட்சிப் பிரதிநிதிகள் என்றிவ்வாறாக பல்வேறு தரப்பட்டவர்களையும் சந்தித்திருக்கிறார். அவர் யாரைச் சந்திக்கவேண்டும், சந்திக்கக்கூடாது என்பதனை அவருக்கு இணக்கமான வடக்கில் உள்ள அரசியல்வாதிகள் தீர்மானித்திருக்கிறார்கள்.

குறிப்பாக யூ எஸ் ஹோட்டலிலும் பல்கலைக்கழக சமூகத்தின் மத்தியிலும் உரையாற்றும் பொழுது, அவர் பேசியவற்றின் சாராம்சம் என்னவென்றால், மாகாண சபைகளுக்கு போதிய அதிகாரங்கள் உண்டு. மேல் மாகாணத்தில் கட்டியெழுப்பப்பட்டு இருப்பதுபோல பிராந்திய பொருளாதாரங்களைக் கட்டி எழுப்புங்கள். மாகாண சபைகளின் நிதி அதிகாரம் அதற்குப் போதுமானது. முதலீட்டுக்கு எனது கையைப் பார்த்துக்கொண்டிராதீர்கள். புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்து நிதி உதவிகளையும் துறை சார்ந்த உதவிகளையும் பெற்றுக் கொள்ளுங்கள் அதற்கு நாம் ஒத்துழைப்போம் என்பதுதான். அதிலும் குறிப்பாக அவர் பொருளாதார வளர்ச்சிக்கு உதாரணங்களாக ஜப்பான், கொரியா, பிரித்தானியா போன்ற ஒற்றையாட்சி நாடுகளை எடுத்துக் காட்டியிருக்கிறார். அங்கேயெல்லாம் கூட்டாட்சி இல்லை. ஆனாலும் அந்நாடுகள் பொருளாதார ரீதியாகச் செழிப்பாகக் காணப்படுகின்றன என்ற பொருள்பட யூஎஸ் ஹோட்டலில் அவர் பேசியிருக்கிறார்.

மாகாண சபைகள் இயங்காத ஒரு பின்னணியில், இப்போதைக்கு மாகாண சபைத் தேர்தல்களை நடத்தும் நோக்கம் இல்லாத ஒரு ஜனாதிபதி, மாகாண சபைகளுக்கு உள்ள நிதி அதிகாரத்தைப் பயன்படுத்துங்கள் என்று கூறுகிறார். விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் வடமாகாண சபையானது முதலமைச்சர் நிதியம் ஒன்றை உருவாக்க முயற்சித்தது. ஏற்கனவே அதையொத்த நிதியம் மேல் மாகாணத்தில் உண்டு. ஆனால் மத்திய அரசாங்கம் அதற்கு அனுமதி வழங்கவில்லை. ஆனால் ஜனாதிபதி கூறுகிறார், 13ஆவது திருத்தத்துக்குள் எல்லா அதிகாரங்களும் உண்டு என்று.

அப்படியென்றால் அவர் 2015இலிருந்து பிரதமராக இருந்த காலகட்டத்தில் கூட்டமைப்போடு சேர்ந்து உருவாக்க முயற்சித்த "எக்கிய ராஜ்ய" என்ற தீர்வு முயற்சிக்குப் பொருள் என்ன? மாகாண சபைக்குள்ள அதிகாரங்கள் போதும் என்றால் எதற்காக அப்படி ஒரு ஏக்கிய ராஜ்ஜிய என்ற புதிய ஏற்பாட்டை குறித்து சிந்தித்திருக்க வேண்டும்? இது பற்றி யாராவது அவர்களிடம் கேள்வி கேட்டார்களோ தெரியவில்லை. ஆனால் வழமையாக இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வு என்று கேட்கும் வடக்கு இந்த முறை அது போன்ற கேள்விகளைக் கேட்கவில்லை என்று அவர் தனக்கு நெருக்கமானவர்களுக்குச் சொன்னதாக ஒரு தகவல்.

இவ்வாறு ஜனாதிபதிவடக்கில், படம் காட்டி, படம் எடுத்து, ரியோ கிறீம் ஹவுசில் ஐஸ்க்ரீமும் அருந்தி, பதின்மூன்றுக்குள் எல்லாம் உண்டு என்று கூறிய அதே காலப்பகுதியில், கிழக்கில் அவருடைய ஆளுநர் பெருமெடுப்பில் ஒரு பண்பாட்டு பெருவிழாவை ஒழுங்குபடுத்தியிருந்தார். கிட்டதட்ட இரண்டு தசாப்தங்களுக்கு முன் நோர்வேயின் அனுசரணையோடு பேச்சுவார்த்தைகள் நடந்த காலகட்டத்தில், திருகோணமலையில் நடந்த "மானுடத்தின் ஒன்று கூடலுக்குப்" பின் அங்கே நடந்த மிகப்பெரிய அளவிலான ஒன்றுகூடல் அதுவென்று கூறலாம். அதை ஒரு மெகா நிகழ்வாக ஆளுநர் திட்டமிட்டு நடத்தியிருக்கிறார். அதற்கு இந்தியாவின் உதவிகளையும் பெற்றிருக்கிறார். அதன்மூலம் தமிழ் மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பண்பாட்டு ரீதியிலான பிணைப்புக்களைப் பலப்படுத்தும் முயற்சிகளை வடக்கிலிருந்து கிழக்கிற்கும் விஸ்தரிக்கும் ஒரு எத்தனம் அது. அப்படி ஒரு பண்பாட்டு விழாவிற்கு இந்தியா பக்கத்துணையாக இருக்கிறது என்பது சிங்கள கடும்போக்குவாதிகளை கோபப்படுத்துமா? அல்லது பயப்படுத்துமா? என்பதனைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

குறிப்பாக ஜல்லிக்கட்டு அல்லது ஏறு தழுவுதல் நிகழ்ச்சிக்கு பயிற்சியாளர்கள் முதற்கொண்டு, சிறப்பு விருந்தினர்கள், அறிவிப்பாளர்கள் வரை தமிழகத்தில் இருந்து தருவிக்கப்பட்டிருக்கிறார்கள். பொங்கல் பெருவிழாவில் ஆயிரக்கணக் கானவர்களை அந்த மைதானத்தில் திரட்டி, நூற்றுக்கணக்கில் பெண்களை ஆட வைத்து, தமிழ் மக்கள் மத்தியில் ஒரு எழுச்சியை அவர் ஏற்படுத்தியிருக்கிறார். அந்நிகழ்வில் உரையாற்றிய சாணக்கியன் தமிழர்களின் தலைநகர் என்று அழைக்கப்படும் திருகோணமலை என்று உச்சரிக்கிறார்.

திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களின் மூலம் அதிகம் சிங்கள மயப்படுத்தப்பட்ட ஒரு தமிழ் மாவட்டம் திருகோணமலை ஆகும். இப்பொழுதும் அங்கே குன்றுகளாகக் காணப்படும் பிரதேசங்களில் விகாரைகள் கட்டப்பட்டு வருகின்றன. ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் திலீபனின் ஒளிப்படத்தை, வாகன ஊர்தியில் எடுத்துச் சென்றபோது தாக்கப்படும் அளவுக்கு அங்கு தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பற்ற ஒரு நிலைமை உண்டு. அப்படிப்பட்ட ஒரு மாவட்டத்தில் பெருமெடுப்பில் ஒரு தமிழ்ப் பண்பாட்டு விழாவை ஆளுநர் செந்தில் தொண்டமான் ஒழுங்கமைத்திருக்கிறார்.

அவர் ஓர் அரச ஊழியர். ஜனாதிபதியின் பிரதிநிதி. ஆனால் நிகழ்வில் அவருக்கு தரப்பட்ட முக்கியத்துவம் அவரை அங்கு கூடியிருந்தவர்கள் வரவேற்ற விதம் என்பவற்றைத் தொகுத்துப் பார்க்கும்பொழுது அவருக்கு அங்கே ஒரு கதாநாயக அந்தஸ்து வழங்கப்பட்டது. அவர் பேசுவதற்காக மேடையை நோக்கி வந்த பொழுது "அலப்பறை கிளப்புறோம்" என்ற ரஜினி படப்பாடல் ஒலிக்க விடப்பட்டது. அவர் ஒரு கதாநாயகனைப் போல மேடையை நோக்கி வந்தார். வரும் வழியில் நடனம் ஆடிய பெண்கள் அவரை நிறுத்தி கைகுலுக்கி செல்ஃபி எடுத்துக் கொண்டார்கள். அதாவது ஒரு நிர்வாக அதிகாரி கதாநாயகனாக கட்டமைக்கப்பட்டிருக்கிறார்.

ஆனால் அந்த பண்பாட்டு விழா நடந்து கொண்டிருந்த அதே மாகாணத்தில், மட்டக்களப்பில், மயிலத்தமடுவில் மேய்ச்சல் தரையை மீட்பதற்கான போராட்டம் 125ஆவது நாளைக் கடந்துவிட்டது. அது மட்டுமல்ல, கிழக்கில் அண்மையில் பெய்த கடும் மழையால், பல பகுதிகளில் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி நிவாரணங்களை வழங்கி வருகின்றது. அந்த ஒளிப்படங்கள் முகநூலில் பகிரப்படுகின்றன. ஒரு பகுதி வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒரு மாகாணத்தில், இது போன்ற மெகா பண்பாட்டு நிகழ்வுகள் அவசியமா என்ற கேள்விகள் உண்டு. மேய்ச்சல் தரைக்காகப் போராடும் விவசாயிகள் வெள்ளத்தில் நிற்கிறார்கள். அவர்களுடைய நாட்டு மாடுகள் வெட்டிக் கொல்லப்படுகின்றன அல்லது சுருக்கு வைத்துப் பிடிக்கப்படுகின்றன. இதற்கெல்லாம் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாத ஓர் ஆளுநர், காளை மாடுகளை அடக்கும்போட்டிகளைஒழுங்குபடுத்துகிறார் என்ற விமர்சனங்களும் எழுந்தன.

செந்தில் தொண்டமான் ஆளுநராக நியமிக்கப்பட்டதிலிருந்து தமிழ் மக்களைக் கவரும் விதத்தில் எதையாவது செய்ய முயற்சிக்கின்றார். எனினும் சிங்கள பௌத்தமயமாக்கலையும் நிலப்பறிப்பையும் அவரால் தடுத்துநிறுத்த முடியவில்லை. அதில் அவருடைய அதிகாரம் வரையறைக்கு உட்பட்டது என்பதனை பௌத்த மதகுருமார் நிரூபித்து வருகிறார்கள். அவ்வாறு தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத ஓர் ஆளுநர், வெள்ள அனர்த்த காலத்தில், பெருமெடுப்பில், பெருந்தொகை நிதியைச் செலவழித்து, ஒரு பண்பாட்டு விழாவை ஏற்பாடு செய்திருக்கிறார். அதில் அவர் கதாநாயகனாகவும் கட்டமைக்கப்பட்டிருக்கிறார்.

எனவே கடந்த வாரம் வடக்கிலும் கிழக்கிலும் நடந்தவைகளைத் தொகுத்துப் பார்த்தால், மிகத் தெளிவான ஒரு செய்தி கிடைக்கின்றது. வடக்கில் ஜனாதிபதி பதின்மூன்றாவது திருத்தத்துக்குள் அதாவது மாகாண சபைக்குள் நிதி அதிகாரம் உண்டு என்று கூறுகிறார். கிழக்கில் அவருடைய ஆளுநர் கதாநாயகனாக மேலெழுகிறார். 13ஆவது திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபையின் ஆளுநர் ஒருவர் கிழக்கில் தமிழ் மக்களுக்கு உற்சாகமூட்டும் விழாக்களை ஒழுங்குபடுத்தியிருக்கிறார். அதனால் அவருக்கு வரவேற்பும் கவர்ச்சியும் அதிகரித்திருக்கின்றன. 13ஆவது திருத்தத்தின் கீழ் மத்திய அரசின் பிரதிநிதியாக காணப்படும் ஆளுநர் ஒருவர் கதாநாயகனாக மேலுயர்ந்துள்ளார். அதன் மூலம் ஆளுநர் சக்தி மிக்கவர் அவர் தமிழ் பண்பாட்டை பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுப்பார் என்று நம்பிக்கையூட்ட முயற்சிக்கப்படுகின்றது.

இவற்றின் மூலம் மாகாண சபையை ஒரு பலமான அதிகார கட்டமைப்பாக வெளிக்காட்டும் உள்நோக்கம் உண்டு. இதில் இந்தியாவை திருப்திப்படுத்தும் உள்நோக்கமுமுண்டு. வடக்கில் ஒரு சந்திப்பின்போது ஜனாதிபதி இந்தியாவுக்கும் மன்னாருக்கும் இடையிலான தரைப்பாலம் பற்றியும் பேசியிருக்கிறார். அவர் அதை நிறைவேற்ற மாட்டார் என்பது புத்திசாலியான யாருக்கும் விளங்கும். ஆனால் அவர் அப்படிச் சொல்கிறார்.

13ஆவது திருத்தத்தை ஒரு தீர்வாக முன்வைப்பதன் மூலம், இந்தியாவைத் திருப்திப்படுத்தும் வாக்குறுதிகளை வழங்குவதன் மூலம், கிழக்கில் பண்பாட்டு பெருவிழாவில் இந்தியாவின் உதவிகளை பெற்றதன் மூலம், அவர் இந்தியாவை சந்தோஷப் படுத்த விளைகிறார். மாகாண சபைகளைப் பலமானவைகளாகக் காட்ட முயற்சிக்கின்றார்.

**நிலாந்தன்**



# வடக்கு கிழக்கில் தொடரும் நில ஆக்கிரமிப்பு - அரசு திட்டமிட்டு செயற்படுகிறது



சிறுபான்மை இன மக்களின் இருப்புக்களை தக்கவைத்துக் கொள்வதற்காக மக்கள் பெரும் முயற்சி எடுத்து வருகின்ற தன்மையினை ஆர்ப்பாட்டங்கள், சத்தியாக்கிரகங்கள், பேரணிகள் போன்றவற்றின் ஊடாகத் தெரிந்துகொள்ளலாம். தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக அணிதிரண்டு வட மாகாண சபையை தமிழ்த் தலைமைகளிடம் கொடுத்திருந்தாலும் மக்களுக்காக வழங்கிய வாக்குறுதிகளை தமிழ அரசியல் தரப்பு இன்றும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறதே தவிர அவற்றை நிறைவேற்றமுடியாத கையாலாகாத நிலையில் இருக்கின்றது என்பது மனவருந்தத் தக்கது.

இன்று பெருமளவிலான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டும், காணாமல் போயுமுள்ள நிலையில் இருக்கும் சிறியளவிலான எண்ணிக்கையையுடைய மக்கள் பரம்பல் இன்று சுருங்கிவருகின்றது. திட்டமிட்ட நிகழ்ச்சிநிரல்களுக்கூடாக இலங்கை அரசு தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளை அபகரித்து வருகின்றது. படைகளின் தேவைக்காகவும், சிங்களக் குடியேற்றங்களுக்காகவும் என இரண்டு விதமான காரணிகளினடிப்படையில் காணி அபகரிப்பு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதனால் இன்று மக்கள் தமது சொந்தக்காணிகளுக்கு உரிய ஆதாரங்களைப் பெற்றுக்கொள்வதில் அதிக அக்கறை காட்டுவதை பிரதேச செயலகங்களில் தினமும் நிற்கும் மக்களைக் கொண்டு நாம் அறியலாம்.

ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளில் உணவு, உடை, உறையுள் என்பன உள்ளடங்குகின்றன. இவற்றில் உணவு, உடை என்பதற்கு அப்பால் உறையுள் என்ற விடயம் நிலத்துடனும், மனித வாழ்வியலுடனும் பின்னிப் பிணைந்தது. நிலமின்றில் நாகரீகமில்லை. உலகில் தோன்றிய நாகரீகங்கள், பண்பாடுகள் எல்லாம் ஒரு நிலத்தை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டிருப்பதை வரலாறு நமக்குணர்த்துகின்றது. சிந்துவெளி நாகரீகம், மொஹஞ்சதாரோ நாகரீகம், ஹரப்பா நாகரீகமாக இருந்தாலும் சரி கிரேக்க நாகரீகம், ரோம நாகரீகமாக இருந்தாலும் சரி அந்நாகரீகங்களெல்லம் அவை தோன்றிய நிலங்களின் பெயர்களை அடிப்படையாக வைத்தே இன்றுவரை அழைக்கப்படுகின்றன. ஆகவே நிலத்துக்கும், மனிதனுக்கும் இடையிலான சம்மந்தம் என்றும் பிரிக்க முடியாதது.

நிலத்தினை அடிப்படையாகக் கொண்டே ஒரு இனத்தின் மொழி, கலாச்சாரம், பண்பாடு என்பன தீர்மானிக்கப்படுகிறது. உருவாகிறது. ஆகவே ஒரு மக்கள் கூட்டத்தின் நிலத்தின் மீதான உரிமையைப் பறிப்பதென்பது அவர்களது வாழும் உரிமையைப் பறிப்பதற்குச் சமமாகும். அதுவே இன்று இலங்கையில் நடைபெற்று வருகிறது. இலங்கையைப் பொறுத்தவரையில் நில அபகரிப்பு என்பது குறுகியகால செயற்பாடு அல்ல. மிக நீண்ட காலமாக நில அபகரிப்பு தமிழர் மத்தியில் நடைபெற்று வருகின்றது. நிலப்பரம்பலை உடைத்து மக்களை சிறுசிறு குழுமங்களாகப் பிரித்து வைத்திருக்கும் நிலைப்பாட்டை இலங்கைப் புறவுருவப்படத்தில் தமிழ் மக்களின் இன்றைய பரம்பலைப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம். இலங்கைத் தீவின் பூர்வீகக் குடிகளான தமிழர்கள் 2500 வருடங்களுக்கும் மேலான சரித்திரத்தைக் கொண்டுள்ளனர். தீவின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் மரபுவழித் தாயகமா கும். சிங்களவர்களுக்கு சார்பாக எழுதப்பட்ட மகாவம்சமோ அல்லது இலங்கைத் தமிழரின் சரித்திரத்தை விபரிக்கும் எந்த ஒரு வரலாற்று நூலுமோ கிழக்கிலங்கையையோ, வன்னிப் பகுதியையோ அல்லது யாழ்ப்பாணத் தமிழ் இராச்சியத்தையோ எந்த ஒரு சிங்கள அரசனும் ஆண்டதாக கூறவில்லை.

குறிப்பிட்ட ஒரு சமூகக் குழுமம் தன்னை ஒரு தேசிய இனமாகப் பிரகடனப்படுத்திக் கொள்வதற்கு அக்குழுமத்திற்குத் தனித்துவமான மொழி, வரலாறு, இலக்கியம், கலை கலாசார பின்னணி என்பவற்றுடன் தொடர்ச்சியான நிலப்பரப்பும் அந் நிலப்பரப்புடன் வரலாற்றுத் தொடர்பும் இருத்தல் வேண்டும் என்று மேற்குலக இனவியல் வரலாற்றாசிரியர்கள் வரையறுத்துள்ளனர். இதிலிருந்தே தாயகக் கோட்பாடு உருவாகியது. இக்கோட்பாட்டை உடைத்து தமிழர்களை சிறுமைப்படுத்தி இனப்பரம்பலை சீர்குலைக்கவே இணைந்திருந்த வடகிழக்கின் எல்லைக் கிராமமான மணலாற்றை சிங்களக் கிராமமாக 1980இல் இலங்கையரசு முதன்முதலில் மாற்றியது. ஆனால் 1949 முதல் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கும் முயற்சியில் இலங்கையரசு முனைப்புக்காட்டி வந்தது.

தமிழர் தாயகத்தில் கிழக்கு மாகாணத்தில் நிறுவப்பட்ட முதலாவது பாரிய சிங்களக் குடியேற்றம் 1949 கல்லோயாக் குடியேற்றமாகும். இதனை ஆரம்பித்து வைத்தவர் இலங்கையின் முதற் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க. அடுத்து 1956முதல் ஏற்பட்ட இனக்கலவரங்கள் தமிழர்களின் நிலங்களை துவம்சம் செய்தது. 1956 ஐத் தொடர்ந்து 1958, 1977, 1978, 1981, 1983என தமிழர் தாயகத்திலும் தென்னிலங்கையிலும் மலையகப் பகுதியிலும் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட கலவரங்கள் தமிழர்களுக்கு உரிமையான நிலங்களையும் சொத்துக்களையும் அபகரிப்பதற்காக இன அழிப்பை நோக்காகக் கொண்டு ஆயுதப்படைகளின் உதவியுடன் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டன. எல்லைக் கிராமங்களிலும் சிங்களவர் மத்தியிலும் வாழ்ந்த தமிழர்கள் இக்கலவரங்களின் போது நடந்த படுகொலைகளைத் தொடர்ந்து வெளியேற்றப்பட்டார்கள், நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

1983 கலவரத்தை தொடர்ந்து தமிழர்கள் பெருமளவில் நாட்டைவிட்டு வெளியேறி மேற்கு நாடுகளுக்கு புகலிடம் தேடிச் சென்றனர். 1983 இல் இலங்கையின் தலைநகரில் தொடங்கப்பட்ட தமிழர்களுக்கெதிரான வன்முறையில் 3000 இற்கும் அதிகமான தமிழர்கள் உயிரோடு எரித்தும் வெட்டியும் கொல்லப்பட்டார்கள். பெண்கள் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு கொல்லப்பட்டார்கள். இக்கலவரம் மலையகத்திற்கும், அனுராதபுரம், பொலநறுவை முதலான தமிழர் பிரதேசங்களுக்கும் பரவியது. இலங்கையை பிரித்தானியர் கைப்பற்றியபோது அனுராதபுரத்தில் தமிழர்களே பெரும்பான்மையாக இருந்தனர். 1983 கலவரத்துடன் தமிழர்கள் முற்றாகவே அனுராதபுரத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

இலங்கை சுதந்திரமடைந்த ஒரு சில ஆண்டுகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களவர்களின் சதவீதம் 3 மடங்கால் அதிகரித்தது. 1961 இல் 7002 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 4500 சதுர கிலோமீற்றர் நிலமானது பிரித்தெடுக்கப்பட்டு அம்பாறை என்ற புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டது. 15000 சிங்களக் குடும்பங்கள் புதிதாக உருவாக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தில் குடியமர்த்தப்பட்டார்கள். 2007 இல் உள்ள தரவுகளின்படி அம்பாறை மாவட்டத்தின் சனத்தொகையில் 60 சதவீதமாக இருந்த தமிழ் மற்றும் முஸ்லீம் மக்கள் 30 சத வீதமான நிலத்தையே உரிமையாகக் கொண்டிருக்க சனத்தொகையில் 30 சத வீதமான சிங்களவர்கள் மாவட்டத்தின் 70 சதவீதமான நிலத்தை உரிமையாகக் கொண்டிருக்கின்றமையக் காணலாம்.

இப்படியாக 1949 இல் தொடங்கி 2024 இன்றுவரை பார்க்கையில் இலங்கைத் தீவில் தமிழர்களின் இருப்பை இல்லாமல் செய்யுமளவுக்கு (Ethnic Cleaning) நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மொத்தத்தில் ஒருபுறம் வடகிழக்கை தாயகமாகக் கொண்ட தமிழினம் 1949 இலிருந்து தனது நிலத்தை திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தாலும் இராணுவ ஆக்கிரமிப்பாலும் படிப்படியாக இழந்து வர மறுபுறம் ஏறத்தாழ 250 வருடங்களாக வாழும் மலையகத் தமிழினம் அபிவிருத்தி திட்டங்கள் என்ற போர்வையில் மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்களாலும் திட்டமிட்ட இனக் கலவரங்களாலும் தமது பூர்வீக நிலத்தின் மீதான இருப்பையும் உரிமையையும் இழந்து நிற்கிறது. கிழக்கு மாகாணத்தில் இன்று தமிழினம் தனது இருப்பை நிலத்தின் மீதான உரிமையை முழுமையாக இழந்துள்ளது. கிழக்கில் தமிழர்கள் தமது உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க முடியாத நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

2009 மே மாதத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுத பலம் அழிக்கப்பட்ட பின்னர் வடபகுதியில் குறிப்பாக வன்னிப் பெருநிலப்பரப்பில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் சிங்கள இராணுவத்தாலும் சிங்களக் குடியேற்றத்தாலும் தொடர்ச்சியாகப் பல்வேறு வழிகளில் சூறையாடப்பட்டு வருகிறது. முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டத்தில் நிலம் அபகரிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் குமுளமுனை ஆண்டான் குளத்தில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான 94 ஏக்கர், திருக்கோணம்பட்டி 26 ஏக்கர், வன்னிசியார் வயல்வெளி 5 ஏக்கர், விண்ணன்கம் வயல்வெளி 18 ஏக்கர், மருதடிக்குளவழி 48 ஏக்கர், அத்தான் கடவை 124 ஏக்கர், ஆலடிக்குளம் 74 ஏக்கர், சாமிப்பிலக்கண்டல் 143 ஏக்கர், ஈரக்கொழுந்தன் வெளி 71 ஏக்கர், படலைக்கல்லு 48 ஏக்கர், நித்தகைக்குளம் 48 ஏக்கர், செம்மலப்புளியமுனை 276 ஏக்கர், நீராவி 163 ஏக்கர், உலாத்துவெளி 15 ஏக்கர், நீராவி வயல்வெளி 20 ஏக்கர், வட்டுவன் 10 ஏக்கர் ஆகிய தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் சிங்களக் குடியேற்றங்களுக்காக அபகரிக்கப் பட்டுள்ளன.

இதேபோல் வட்டுவாகல் 600 ஏக்கர், விமானப்படைக்கென ஒலுமடு அம்பகாமம் பகுதியில் 8000 ஏக்கர், அம்பகாமம் ஏனைய காணி 500 ஏக்கர், ஒட்டுசுட்டான் பிரதேச சபை உப அலுவலகம், நூல் நிலையம் ஆயுள்வேத வைத்தியசாலை உள்ள இடங்கள் 2 ஏக்கர், ஒட்டுசுட்டான் பழைய சந்தைக்காணி 1 ஏக்கர், ஒட்டுசுட்டான் முந்திரிகைத்தோட்டம் 15 ஏக்கர், ஒட்டுசுட்டான் இராணுவமுகாம் 10 ஏக்கர் புதுக்குடியிருப்பு பொது விளையாட்டு மைதானம் 2 ஏக்கர், பழைய சந்தைக்காணி சனசமூக நிலையம், பொதுமலசல கூடம் 1 ஏக்கர், பொன்னம்பலம் வைத்தியசாலை இருந்த காணி 2 ஏக்கர், பிரதேச செயலகத்திற்கு முன்காணி 10 ஏக்கர், தேவிபுரத்தில் சிவசாமி என்பவரின் காணி 2 ஏக்கர், இரணைப்பாலை வீதி தேவிபுரத்தில் நவமணிப்பிள்ளையார் கோவில் உள்ள பகுதி 30 ஏக்கர், 10 பண்ணைகள் உள்ளடங்கலாக 1000 ஏக்கர் திட்டத்தில் கென்பாம், டொலர்பாம் ஆர்.வி.ஜி. கம்பனி காக்காபோட், சிலோன் தியேட்டர்ஸ், நாவலர் பண்ணை இவர்கள் உள்ளிட்ட 10 பேருடைய 10,000 ஏக்கர் காணியும் அபகரிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் கொக்குத்தொடுவாய் மணலாறு 3417 ஏக்கர், கேப்பாபிலவில் தனியார் காணி 526 ஏக்கர், சீனியாமோட்டையில் ஒரு பகுதி 10 ஏக்கர், கேப்பாபிலவில் ஏனைய காணி 2000 ஏக்கர், ஓதியமலையும் அதனை அண்டிய பகுதிகளும் 3000 ஏக்கர் உள்ளடங்கலாக 29 ஆயிரத்து 311 ஏக்கர் நிலம் முல்லைத்தீவில் அபகரிக்கப்பட்டுள்ளது.

மணலாறு பிரதேசம் வெலி ஓயா என்ற பெயரில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்ட பிரதேசமாகக் காணப்படுகின்றது. கரைதுறைப்பற்று மற்றும் ஒட்டுசுட்டான் ஆகிய இரு பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக மணலாறு பிரதேச செயலர் பிரிவு காணப்படுகின்றது. கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிற்குள் ஜனகபுர கிரியன்வெள, அகட்டுஹால்வெள கல்யாணபுர, சம்பத்நுவர ஆகிய கிராமங்களும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குள் கஜபாபுர, நவகல்யாணபுர அத்தாவட்டுநுவெள, நிக்கவெள ஆகிய பகுதிகளும் சிங்களவர் குடியேற்றப்பட்ட பிரதேசமாகக் காணப்படுகின்றன.

இதில் கஜபாபுர என்னும் கிராமம் எமது பழைய சிலோன் தியேட்டர்ஸ் சுமார் 300 புதிய குடியேற்றங்கள் 2010 ஆம் ஆண்டிற்குப் பின்பு செய்யப்பட்டுள்ளன. இவர்களுக்கு தலா ஏக்கர் குடியிருப்புக்காணியும் ஒரு ஏக்கர் விவசாயக் காணியும் வழங்கப்பட்டுள்ளது. இப்பிரதேசம் தமிழர்களின் விவசாய நிலங்களாகும். தனிக்கல்லு, உடங்கா போன்ற குக்கிராமங்கள் இதனுள் அடங்கும் வயல்வெளிகளாகும்.

இதேபோன்று நிக்கவெள என்னும் இடத்தில் 450 புதிய குடியேற்றங்களும் கல்யாணபுரவில் 400 புதிய குடியேற்றங்களும் கிரிபன்வெள எனப் பெயர் சூட்டிய இடத்திலிருந்து சூரியனாறுக்கு செல்லும் வழியில் 400 புதிய குடியேற்றங்களும் 2010 இற்குப் பின் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் கஜபாபுர என சிங்களப் பெயரிடப்பட்ட தற்பொழுது ஒதியமலைக் கிராமத்தை ஆக்கிரமித்து உள்ளது. இது மகாவலி எல் வலயம் எனக் குறிப்பிடப்பட்டு சிங்களக் குடியேற்றம் செய்யப்படுகின்றது. இதேபோல் யாழ் மாவட்டத்தில் வலி. வடக்கில் 24 கிராம அலுவலர் பிரிவுகளில் 6500 ஏக்கர் தமிழ் மக்களுடைய நிலம் அபகரிக்கப்பட்டள்ளது. 12 பாடசாலைகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, 25 இந்துக் கோவில்கள், 15 கிறிஸ்தவ தேவாலயங்கள், மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, காங்கேசந்துறை மீன்பிடித் துறைமுகம் இவை அனைத்தும் தற்பொழுது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. சுமார் 81.5 மீற்றர் நீளமான கடற்கரையோரங்களும் 144.5 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட பகுதியும் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினால் விழுங்கப்பட்டுள்ளன.

13ஆம் பக்கம் பார்க்க...

**சுழியோடி**

# நரகத்தில் ஒரு இடைவேளைக்குப் பிறகு..!



மக்கள் கிளர்ச்சிக்கு வழிவகுத்த பொருளாதார நெருக்கடியின்போது கடுமையான பொருட்கள் தட்டுப்பாட்டுக்கும் மக்களை இரவு பகலாக எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் மைல் கணக்கில் வரிசைகளில் காத்துநிற்கவைத்த எரிபொருட்கள் தட்டுப்பாட்டுக்கும் பிறகு கடந்த வருடம் பெரும்பாலான மக்களினால் வாங்கமுடியாத விலைகளில் இருந்தாலும் பொருட்களைப் பெறக்கூடியதாக இருந்த காலப்பகுதியை கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று அதன் ஆசிரிய தலையங்கத்தில் 'நரகத்தில் இடைவேளை' (Interval in the Hell) என்று வர்ணித்திருந்தது.

தற்போது புதுவருடம் பிறந்த நிலையில் வரி அதிகரிப்புகளின் விளைவாக பொருட்களின் விலைகளும் சேவைகளின் கட்டணங்களும் மக்களினால் தாக்குப் பிடிக்க முடியாத அளவுக்கு உயர்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கும்போது அந்த வர்ணனை எவ்வளவு கச்சிதமானது என்பதைப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

பெறுமதிசேர் வரியை (வற்) அரசாங்கம் 15 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக அதிகரித்ததுடன் ஏற்கெனவே விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்த பெருவாரியான பொருட்களும் அந்த வரிவிதிப்பு வீச்சுக்குள் கொண்டுவரப்பட்டதை அடுத்து (ஏற்கனவே, வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பதற்கு பல்வேறு சிக்கன உபாயங்களை கடைப்பிடித்துவந்த) பெரும்பாலான மக்கள் என்ன செய்வது என்று தெரியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள். செலவினங்களைக் குறைத்து அரச வருவாயை அதிகரிப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் விதித்திருக்கும் நிபந்தனைகளை அரசாங்கம் மக்களுக்கு நேரக்கூடிய இடர்பாடுகளைப் பற்றி சிந்திக்காமல் நடைமுறைப்படுத்துவதே இதற்குக் காரணமாகும்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியைத் தொடர்ந்து பெறுவதற்கு அதன் நிபந்தனைகளை நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. பிச்சைக்காரர்களுக்குத் தெரிவு இல்லை. இந்த வருடம் தேர்தல் ஆண்டாக இருந்தாலும் கூட முன்னரைப் போன்று அரசியல் கட்சிகளிடம் இருந்து இனிப்பான பொருளாதார நிவாரண உறுதிமொழிகளைப் பெரிதாக எதிர்பார்க்கவும் முடியாது. ஏனென்றால், முக்கியமான எதிரணி கட்சிகளும் கூட ஆட்சிக்கு வந்தால் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒத்துழைத்துச் செயற்படப் போவதாகவே கூறுகின்றன. நிபந்தனைகளை குறித்து நாணய நிதியத்துடன் மீள் பேச்சுவார்த்தைகளை நடத்தப்போவதாக அந்த கட்சிகள் கூறினாலும் அது எந்தளவுக்கு சாத்தியமாகும் என்ற கேள்வி இருக்கிறது.

எதிர்காலத்தில் பதவிக்கு வரக்கூடிய எந்த அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியத்துடனான உதவித்திட்டத்தை மீள்பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தமுடியும். ஆனால், சர்வதேச ஆதரவைப் பெறுவதற்கு தற்போது முன்னெடுக்கப்படும் பாதையையே தொடர்ந்து பின்பற்றவேண்டியிருக்கும் என்று சில தினங்களுக்கு முன்னர் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க செய்தியாளர்கள் மகாநாட்டில் கூறினார்.

"தற்போது தெரிவு செய்யப்பட்டிருக்கும் பாதையில் இருந்து விலகினால் சர்வதேச ஆதரவு கிடைக்காமல் போகும். சர்வதேச நாணய நிதியத்தின் உதவித்திட்டம் கடந்த வருடம் செப்டெம்பர் முதலாம் திகதி தொடங்கியது. கடனுதவியின் முதலாவது தவணைக் கொடுப்பனவு வழங்கப்பட்ட பிறகு அடுத்த தவணைக் கொடுப்பனவுக்கு முன்னதாக எமது கடப்பாடுகள் குறித்து மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இது அடுத்த நான்கு வருடங்களுக்கு எந்த அரசாங்கம் பதவியில் இருந்தாலும், காலப் பொருத்தமான முறையில் கொள்கைகளில் மாற்றத்தைச் செய்வதற்கு மீண்டும் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தவேண்டிய ஒரு தொடர்ச்சியான செயன்முறையாகும்.

"பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை. ஆனால், சர்வதேச ஆதரவைப் பெறுவதற்கு இதே திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டியது அவசியம். அந்த விளக்கப்பாட்டின் அடிப்படையில்தான் வெளிநாடுகளின் அரசாங்கங்களும் ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களும் கடன் நிவாரணத்துக்கு இணங்கியிருக்கின்றன. இதே கடன் மறுசீரமைப்பு பாதையில் அடுத்த பத்து வருடங்களுக்கு பயணம் செய்யவேண்டிய தேவை இருக்கிறது.

"இதில் மாற்றத்தைச் செய்தால் அவர்களும் கடன் நிவாரணம் தொடர்பான தீர்மானத்தை மாற்றிவிடலாம். அதனால் தற்போதைய பாதையில் இருந்து விலகினால் தங்களால் தொடர்ந்து ஆதரவை வழங்க முடியாது என்று அவர்களால் கூறமுடியும். அதற்கு பிறகு வருடாந்தம் நாம் 600 கோடி அமெரிக்க டொலர்கள் கடனைத் திருப்பிச்செலுத்தவேண்டியிருக்கும்" என்று அவர் கூறினார். இலங்கை அகப்பட்டிருக்கும் சிக்கலின் பாரதூரத்தன்மையை கலாநிதி வீரசிங்கவின் விளக்கம் தெளிவாக உணர்த்துகிறது.

புதிய வருடத்தில் கடுமையான இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வருடத்தின் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் கூறியிருந்தார். பொருளாதார நிலவரம் தொடர்பில் மக்களுக்கு பொய் கூற விரும்பவில்லை என்றும் மக்களால் விரும்பப்படாத தீர்மானங்களை எடுப்பதற்கு தயங்கப்போவதில்லை என்றும் கூறுவதன் மூலமாக அவர் தன்னை ஒளிவுமறைவற்ற தலைவராக காட்டிக்கொள்ளலாம்.

ஆனால், வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்கு முன்னெடுக்கப்படும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் விளைவான சுமையை சாதாரண மக்களினால் எவ்வளவு காலத்துக்கு தாங்கிக்கொள்ள முடியும்? அந்த சுமை சமுதாயத்தின் சகல பிரிவுகள் மீதும் ஒப்புரவான ஒரு முறையில் பகிரப்படுவதாகவும் இல்லை. மறைமுகமான வரிகளின் விளைவான சுமை சாதாரண மக்களையே கடுமையாக அழுத்துகிறது.

### நிலவர அறிக்கை

இத்தகைய பின்புலத்தில், குடிசன மதிப்பு, புள்ளி விபரவியல் திணைக்களம் கடந்தவாரம் வெளியிட்ட அறிக்கையை நோக்குவது அவசியமானதாகும். நாட்டின் தற்போதைய நிலவரம் மாத்திரமல்ல எதிர்கால நிலவரமும் கூட இருள் கவிழ்ந்ததாகவே இருக்கப்போகிறது என்பதை அறிக்கை தெளிவாகப் புரிந்து கொள்ளவைக்கிறது.

கடந்த வருடத்தின் முதல் காலாண்டில் 4.70 சதவீதமாக இருந்த வேலையில்லாத் திண்டாட்டம் இரண்டாவது காலாண்டில் 5.20 சதவீதமாக அதிகரித்தது. இன்று ஒரு குடும்பத்தின் அடிப்படை மாதாந்த வேதனம் 40 ஆயிரம் ரூபாவுக்கும் 50 ஆயிரம் ரூபாவுக்கும் இடைப்பட்டதாக இருக்கிறது. அது வெறுமனே உணவுத் தேவைக்கு மாத்திரமே போதுமானது. பிள்ளைகளின் கல்வி, உடை, மருத்துவ பராமரிப்பு, பயணங்கள் மற்றும் பொழுதுபோக்கு செலவினங்களுக்கு புறம்பாக பணம் தேவை. தாய், தந்தையையும் இரு பிள்ளைகளையும் கொண்ட ஒரு குடும்பத்தின் உணவுச் செலவுக்கு சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா தேவைப்படுகிறது. 60.5 சதவீதமான குடும்பங்களின் மாதாந்த சராசரி வருமானம் கடுமையாகக் குறைந்துவிட்டது. அதேவேளை, 91 சதவீதமான குடும்பங்களின் மாதாந்த செலவின மட்டம் கடுமையாக உயர்ந்துவிட்டது. பொருளாதார நெருக்கடியின் காரணமாக 22 சதவீதமான குடும்பங்கள் வங்கிகளிடம் அல்லது தனியாரிடம் கடன் வாங்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன. 75.2 சதவீதமான குடும்பங்களின் உணவு முறையில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. 97.2 சதவீதமான குடும்பங்கள் செலவினங்களைச் சமாளிக்க பல்வேறு உபாயங்களைக் கடைப்பிடிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. அதேவேளை 46.4 சதவீதமான குடும்பங்கள் சேமிப்பைக் குறைத்திருக்கின்றன அல்லது சேமிப்புக்களை அன்றாட தேவைக்கு செலவு செய்கின்றன. 2019ஆம் ஆண்டுக்கு பிறகு வறியவர்களின் தொகை சுமார் 40 இலட்சத்தில் இருந்து 70 இலட்சமாக அதிகரித்திருக்கிறது. சனத்தொகையில் 31 சதவீதத்தினர் வறுமைக்கோட்டின் கீழ் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கொழும்பில் இயங்கும் 'லேர்ண் ஏசியா' என்ற சிந்தனைக்குழாம் கடந்த வருடம் மேற்கொண்ட ஆய்வொன்றின் மூலம் சனத்தொகையில் மூன்றில் ஒரு பிரிவினர் அல்லது 33 சதவீதமானோர் தினம் ஒருவேளை உணவைத் தவிர்ப்பதாகவும் 47 சதவீதமானவர்கள் உணவின் அளவுகளைக் குறைத்திருக்கும் அதேவேளை வயது வந்தவர்களில் 27 சதவீதமானவர்கள் பிள்ளைகளுக்குத் தேவை என்பதற்காக தங்களது உணவை கணிசமாகக் கட்டுப்படுத்திக்கொள்வதாகவும் கண்டறியப்பட்டிருக்கிறது.

குறைந்த வருமானம் காரணமாக போதுமான உணவுப் பொருட்களைப் பெறமுடியாததால் முகங்கொடுக்க வேண்டியிருக்கின்ற சவால்களை சமாளிக்க பலகுடும்பங்கள் உணவைக் குறைத்திருப்பது மாத்திரமல்ல, வழக்கமாக சாப்பிடுகின்ற உணவு வகைகளைக் கைவிட்டு மலிவான வேறு வகை உணவுகளை நாடியிருப்பதாக சில சிவில் சமூக அமைப்புக்கள் மேற்கொண்ட ஆய்வுகள் கூறுகின்றன.

வழமையான உணவு வகைகளை வாங்குவது கட்டுப்படியாகாது என்பதால் குடும்பங்கள் கிரமமான உணவுகளைத் தவிர்ப்பதாகவும் தங்களது அடுத்தவேளை உணவு எங்கிருந்து வரும் என்பது தெரியாத நிலையில் சிறுவர்கள் வெறுவயிற்றுடன் படுக்கைக்கு செல்கிறார்கள் என்றும் யுனிசெவ் அமைப்பின் தெற்காசிய பிராந்தியப் பணிப்பாளர் ஜோர்ஜ் லாறியீ அட்ஜே 2022 ஆகஸ்டில் அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

சிறுவர்கள் மத்தியிலான மந்தபோசாக்கைப் பொறுத்தவரை தெற்காசியாவில் ஆப்கானிஸ்தானுக்கு அடுத்ததாக இலங்கை இரண்டாவது இடத்தில் இருக்கிறது என்றும் அறிக்கைகள் கூறின.

இது இவ்வாறிருக்க, இவ்வருடத்தின் முதல் காலாண்டின் இறுதியில் மக்களின் வாழ்க்கைச் செலவுச் சுமையில் 75 சதவீதம் குறைவடையக்கூடியதாக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று வர்த்தக, வாணிப மற்றும் உணவுப்பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ கடந்த வாரம் கூறியிருக்கிறார். அரசியல்வாதிகள் உறுதிமொழிகளை அளிப்பார்கள். பிறகு அவற்றை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டால் அதற்கும் காரணங்களை தயாராகவே வைத்திருப்பார்கள். வாழ்க்கைச் செலவுச் சுமையில் 75 சதவீதக் குறைப்பு எந்தளவுக்கு சாத்தியமாகும் என்பது முக்கியமான கேள்வி.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியில்லாமல் அரசாங்கத்தினால் எதையும் செய்யமுடியாமல் இருக்கலாம். ஆனால், அதனால் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகளை நிறைவேற்றுகின்றபோது அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் கடுமுனைப்பான நடவடிக்கைகள் சமூக அமைதியின்மையை தோற்றுவிக்கக்கூடியவை. அறகலயவைப் போன்ற மக்கள் கிளர்ச்சி மீண்டும் மூளுவதற்கு சாத்தியம் இல்லை என்று அரசாங்கம் மெத்தனமாக நினைக்கிறது போலும். அவ்வாறு மூண்டாலும் கூட படை பலம் கொண்டு ஆரம்பத்திலேயே அடக்கிவிடலாம் என்று அதற்கு நம்பிக்கை இருக்கக்கூடும்.

சர்வதேச நாணய நிதியத்தின் இறுக்கமான கடனுதவி நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தியதன் விளைவாக ஆர்ஜன்டீனா போன்ற நாடுகளில் மூண்ட அரசியல் - சமூக எழுச்சிகளில் இருந்து எமது அரசாங்கம் மாத்திரமல்ல நாணய நிதியமும் பாடத்தைப் படிக்கவேண்டும். லத்தீன் அமெரிக்க, மத்திய கிழக்கு, வட ஆபிரிக்க பிராந்திய நாடுகளிலும் அத்தகைய எழுச்சிகள் ஏற்பட்டன. எமது பிராந்திய நாடான பாகிஸ்தானும் அதே பிரச்சினையை எதிர்நோக்குகிறது.

### மனித உரிமை மீறல்கள்

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகள் அசமத்துவத்தை அதிகரித்து அமைதியின்மையை தூண்டுவதாக பல சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருக்கின்றன.

"சிக்கன நடவடிக்கைகள் என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் அத்தியாவசிய பொதுச்சேவைகள் மீதான அரசாங்கத்தின் செலவினக் குறைப்பும் பிற்போக்கான பெருமளவு வரிவிதிப்புகளும் மனித உரிமைகளை மலினப்படுத்தியிருக்கின்றன என்பதற்கு வரலாற்றில் தாராளமான சான்றுகள் இருக்கின்றன. வறுமையையும் அசமத்துவத்தையும் மேலும் தீவிரப்படுத்துவதற்கும் மனித உரிமைகள் மலினப்படுத்தப்படுவதற்கும் வழிவகுக்கும் கொள்கைகளை சர்வதேச நாணய நிதியம் நாடுகள் மீது திணிக்கிறது.

13ஆம் பக்கம் பார்க்க...

**வீரகத்தி தனபாலசிங்கம்**

# வடக்கு கிழக்கு மாகாணங்களின் மீன்பிடித் தொழிற்துறையின் வளங்களும் வாய்ப்புகளும்



ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பது அந்நாட்டின் நிலைபேறுகைக்கு ஸ்திரத்தினை வழங்குகின்றது. இலங்கையில் உள்ள வளசெழிப்பு நாட்டின் அபிவிருத்திக்கு பெரும்பங்காற்றக்கூடியது. இலங்கையின் கால்பங்குக்கும் அதிகமான நிலப்பரப்பைக் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் கொண்டுள்ளன. இந்தவகையில் இலங்கையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிலப்பரப்பு, அதில் அடையாளப்படுத்தக்கூடிய வளங்கள் அல்லது இதுவரை கண்டறியப்பட்ட வளங்கள் தொடர்பாக தெளிவுபடுத்துவதாகவும், அந்த வளங்களின் இப்போதைய பயன்பாடற்ற முறைமையை மாற்றியமைத்து உச்சப்பயனைப் பெறுதல், அதனூடே வடக்கு - கிழக்கின் விவசாயத்துறை, உட்கட்டமைப்பு, கடல்சார் பொருளாதாரம் என்பவற்றை அபிவிருத்தி செய்வது பற்றியும் இந்த கட்டுரைத்தொடர் விளக்குகின்றது.

இலங்கை நாட்டினுடைய 63 சதவீதமான கடற்கரைகளை கொண்ட வடக்கு கிழக்கு மாகாணங்களில் வட மாகாணத்தில் 40 சதவீதமான கடற்கரைகளும் கிழக்கு மாகாணத்தில் 23 சதவீதமான கடற்கரைகளும் காணப்படுகின்றன. இவ்விரு மாகாணங்களும் மிகச் சிறந்த மீன்பிடி வளத்தைக்கொண்ட கடல்பரப்பை தன்னகத்தே கொண்டிருக்கின்றன. இக்கடற்கரைகள் மீன்பிடி, மீன் வளர்ப்பு, சுற்றுலா ஆகியவற்றுக்கு பொருத்தமாக உள்ளன. மீன்பிடித் தொழிலானது இவ்விரு மாகாணங்களிலும் விவசாயத்துறைக்கு அடுத்து மக்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்கும் துறையாகும். நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் 22 சதவீதத்தையும் வடக்கு மாகாணம் வழங்கி வருகின்றது. இவ்விரு மாகாணங்களிலும் காணப்படும் பாரிய, நடுத்தர, சிறு குளங்களை அடிப்படையாகக் கொண்டு நன்னீர் மீன்பிடியானது இடம்பெறுவதுடன் களப்பு, குடாக்களில் காணப்படும் ஆழம் குறைந்த பகுதிகளில் பல்வேறு வளர்ப்புத்திட்டங்களும் நடைபெறுகின்றன. இந்த வகையில் கடல் மீன்பிடி, நன்னீர் மீன்பிடி, வளர்ப்புத்திட்ட மீன்பிடி ஆகிய மூன்று மீன்பிடி முறைகள் இவ்விரு மாகாணங்களிலும் வளர்ச்சி பெற்றுள்ளன.

**மீன்பிடிசார் சனத்தொகை**

மீன்பிடித்தொழில் துறையினை அடிப்படையாகக் கொண்டு கிழக்கு மாகாணத்தில் 97,790 முழுநேர மீன்பிடியாளர்களும் வட மாகாணத்தில் 41,667 முழுநேர மீன்பிடியாளர்களும் காணப்படுகின்றனர். இந்த அடிப்படையில் நோக்கும் போது 12,0378 செயல்திறன் வாய்ந்த மீன்பிடியாளர்களின் வாழ்வாதாரத்தை நிர்ணயிக்கும் துறையாக மீன்பிடித்துறை காணப்படுகின்றது. இதில் இவர்கள் நேரடி வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

**கடல் மீன்பிடி**

வடக்கு கிழக்கு மாகாணங்களின் பிரதான வளங்களில் ஒன்றான கடல், இந்து சமுத்திரத்தின் பெருங்கடலை தனது வளமாகக் கொண்டிருக்கின்றது. உலகளாவிய மட்டத்தில் வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் நீலப்பொருளாதாரம் என்பது இப்போதும் பெரிதும் முன்னிலைப்படுத்தப்படும் ஒரு துறையாக காணப்படுகின்றது. கடல் மீன்பிடியில் ஆழ்கடல் மீன்பிடி, கரையோர மீன்பிடி என இரு முறைகள் காணப்படுகின்றன. ஆழம் குறைந்த கரைகளுக்கு நெருக்கமாக உள்ள கடல் பகுதியில் முதலீடு குறைந்த சிறிய வள்ளங்கள், தெப்பங்கள், மிதவைகள் போன்ற கலங்களை பாவித்து மீன்பிடிக்கும் முறை காணப்படுகின்றது. இந்த வகைப்பாட்டின் கீழ் பாரம்பரியமான, அதே நேரம் இயந்திரமயப்படுத்தப்படாத மீன்பிடிக் கலங்களும் ஓரளவுக்கு இயந்திரமயப்படுத்தப்பட்ட பாரம்பரிய கலங்களும் உள்ளடங்குகின்றன. இவர்கள் கரையிலிருந்து 20 கடல் மைல்களுக்குள் மட்டுமே தொழில் செய்வதனாலும் அதிகளவிலான மீனவர்கள் இந்த வகைப்பாட்டுக்குள் உள்ளடங்குவதனாலும் இவ்வகை மீன்பிடியில் ஈடுபடுவோரது வருமானம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. பெருந்தொகையானவர்கள் இந்த வகைத் தொழிலில் ஈடுபடுவதால், மீனினங்களின் இருப்புக் குறைந்த கடல்பரப்பில் அதிகளவு போட்டியிட்டு மீன்பிடிப்பதால், மீன்கள் உரிய நிறை பெறுவதற்குள் பிடிக்கப்படுவதுடன் அவற்றின் பெருக்க அளவும் முழுமை பெறாத சூழல் நிலவுகின்றது. வடமாகாணத்தில் கரையோரம் 2,592 இயந்திரமயப்படுத்தப்படாத பாரம்பரிய கலங்களும்1660 இயந்திரமயப்படுத்தப்பட்ட கலங்களும் மீன்பிடியில் ஈடுபடுகின்றன.

கிழக்கு மாகாணத்தில், 529 இயந்திரமயப்படுத்தப்படாத பாரம்பரிய கலங்களும் 7,812 இயந்திரமயப்படுத்தப்பட்ட பாரம்பரிய கலங்களும் மீன்பிடியில் ஈடுபடுகின்றன. வளம் குறைந்த பகுதிகளில் மட்டுப்படுத்தப்பட்ட மீன்பிடிக் கலங்களை பாவித்து அதிகளவில் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதனால், இது சுய தேவைப்பூர்த்தி, அயல் சந்தைகளில் மட்டும் விற்பனை செய்வதற்கான உற்பத்தித் துறையாகவே செயற்படுகின்றது. இதன் தேறிய வருவாய் வீதம் குறைவாகவே காணப்படுகின்றது. மீனவர்களைப் பொறுத்து, தம் குடும்ப வருமானத்துக்கு மட்டுமே இத்தொழிலில் வருமானம் கிடைப்பதால் சேமிப்பு, முதலீட்டு நடவடிக்கைகளில் இக்குடும்பங்களால் ஈடுபட முடியாதுள்ளது. இதனால் தான் இம் மீன்பிடிமுறை செயற்றிறன் குறைந்த தொழிலாக மீனவர்களால் பார்க்கப்படுகின்றது.

அதிகளவு மீன்பிடிப் பரப்பை கொண்டுள்ள இவ்விரு மாகாணங்களிலும் உள்ள மக்கள் இதன் நன்மையைப் பெற முடியாதுள்ளதால், பன்னாட்டு அரசுகளும் ஆதிக்கச் சக்திகளுமே எமது கடலில் சட்ட விரோத ஊடுருவலை மேற்கொண்டு நன்மை பெற்றுச் செல்கின்றன. குறிப்பாக இந்தியா, சீனா மற்றும் பர்மியா பன்னாட்டுப் படகுகள் எமது கடற்பிரதேசம் மீது அதிக நாட்டம் கொண்டுள்ளன.

வடமாகாணத்தில், வெளியிணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட 11,043 படகுகளும் கிழக்கு மாகாணத்தில் 6,166 படகுகளும் காணப்படுகின்றன. இப்படகுகள் மூலம் 50 கடல் மைல்களுக்கு சென்று தொழில் செய்ய முடியும். அதிகளவான மீனவர்கள் இவ்வகை படகுகளில் தான் தமது தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். 2-4 தொழிலாளர்கள் கூட்டாகச் சென்று ஒரு இரவு மட்டுமே கடலில் தங்கி மீன்பிடிக்கின்றனர். பிடித்த மீன்களை பாதுகாப்பாக கரைக்கு கொண்டு வந்தால் மட்டுமே வருமானம் கிடைக்கும் என்பதால் இவர்களின் வினைத்திறனும், விளைபயனும் மட்டுப்படுத்தப்பட்டே உள்ளது. இவர்களது பாவனையிலுள்ள வலைகளும் சிறிய தொகை மீன்களை பிடிக்கக் கூடியதாகவே உள்ளது. நிறைந்த வருமானத்தையும் தொழில் பாதுகாப்பையும் தரக்கூடிய தொழிலாக காணப்படும் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடும் எண்ணிக்கை இவ்விரு மாகாணங்களிலும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. இந்திய இழுவை மடிப் படகுகளினால் இத் தொழிலாளர்களின் வலைகள் அழிக்கப்படுவதனால், ஆழ்கடலில் மீன்பிடிப்பது மிகவும் சவாலான தொழில் வகையாக காணப்படுகின்றது.

நவீனமயப்படுத்தப்பட்ட மீன்பிடி முறைகளில், பல்நாள் படகுகளை கொண்டு மீன்பிடியில் ஈடுபடும் 145 படகுகள் வடபகுதியில் காணப்படுகின்றன. கிழக்கில் 971 படகுகள் காணப்படுகின்றன. பல் நாள் படகுகளை மீனவர்கள் பயன்படுத்தும் போது அதற்கு உகந்த உட்கட்டுமான வசதிகளைக் கொண்ட துறைமுகங்கள் தேவைப்படுகின்றன. கிழக்கில் திருகோணமலை, வாழைச்சேனை, ஒலுவில் ஆகிய துறைமுகங்களும் வடக்கில் காங்கேசன்துறை, மன்னார் ஆகிய துறைமுகங்களும் செயல்பட்டு வருகின்றன. இப் பல்நாள் படகில் ஆழ்கடலுக்குச் சென்று பல நாள்கள் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபட முடியும் என்பதுடன் பாதுகாப்பாக மீனை எடுத்து வரும் குளிர் அறைகள், நீர் தொட்டிகள் என்பனவும் வசதிப்படுத்தப்பட்டுள்ளன. வடக்கிலும் கிழக்கிலும் பல்நாள் படகினை பயன்படுத்துவதற்கு தேவையான துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்படாததனால் இத்தொழில்துறையின் வளர்ச்சி தொடர்ந்து மந்தமடைந்து வருகிறது.

ஓரளவு வசதியுடன் கூடிய ஒரு நாள் படகுகளை நோக்கும் போது, வடக்கில், யாழ்ப்பாணத்தில் 411 படகுகளும் மன்னாரில் 197 படகுகளும் கிழக்கில், திருகோணமலையில் 12 படகுகளும் மட்டக்களப்பில்18 படகுகளும் அம்பாறையில் 71 படகுகளும் காணப்படுகின்றன. இப்படகுகளில் மீன்களை பாதுகாத்து வைப்பதற்கும் ஒரு நாள் கடலில் தங்கியிருந்து தொழில் செய்வதற்குமான வசதிகள் காணப்படுகின்றன. எனினும் இப்படகுகளையும் ஆழம் குறைந்த கரைகளைக் கொண்ட இறங்கு துறைகளுக்கு எடுத்து வர முடியாது என்பதனால், இவற்றிற்கும் தரமான துறைமுகங்கள் தேவைப்படுகின்றன.

வடக்கு கிழக்கு மாகாணத்தின் மீன்பிடியின் பிரதான உட்கட்டமைப்பாக அமைந்திருப்பது இறங்கு துறைகளாகும். இறங்கு துறைகளில் பாதுகாப்பாக படகுகளை நிறுத்திவைக்க முடிவதுடன் அனர்த்த காலங்களிலும் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள இயலும். எனினும் கடல்நீர் மாறுபாட்டுக்கேற்ப இந்த இறங்கு துறைகளும் சில சவால்களை எதிர் கொண்ட வண்ணமேயுள்ளன. வட மாகாணத்தில், யாழ்ப்பாணத்தில் 107 இறங்கு துறைகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் 27 இறங்கு துறைகளும் மன்னார் மாவட்டத்தில் 53 இறங்கு துறைகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 33 இறங்கு துறைகளும் செயற்பாட்டிலுள்ளன. வடமாகாணத்தில் மொத்தமாக 220 இறங்கு துறைகள் காணப்படுகின்றன.

மீனை பாதுகாப்பாக கரைக்கு கொண்டு வருவதற்கும் நாடு முழுவதிலுமுள்ள நுகர்வோருக்கு கொண்டு சேர்ப்பதற்குமான மற்றுமொரு இடையீட்டு சேவையாக ஐஸ் உற்பத்தியைக் குறிப்பிட முடியும். அரசு, தனியார் ஆகியன இணைந்து இம்முதலீட்டில் ஈடுபட்டுள்ளன. கிழக்கில், திருகோணமலையில் 8 தொழிற்சாலைகளில் இருந்து 284 மெற்றிக்தொன் நாளாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்றது. மட்டக்களப்பில் 6 தொழிற்சாலைகள் மூலம் 175 மெற்றிக்தொன்னும், அம்பாறையில் 04 தொழிற்சாலைகளிலிருந்து 72 மெற்றிக்தொன்னும், யாழ்ப்பாணத்தில் 06 தொழிற்சாலைகள் மூலம் 145 மெற்றிக்தொன்னும், முல்லைத்தீவில் 02 தொழிற்சாலை மூலம் 48 மெற்றிக்தொன்னும் நாளாந்தம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

மீன்பிடித் தொழில்துறையில் ஐஸ் உற்பத்தி என்பது மிக மிக அவசியமானதாகும். மீனை கடலிலிருந்து கரைக்கு கொண்டு வருவதிலும் சந்தைப்படுத்தல் நோக்கம் கருதி தூர இடங்களுக்கு எடுத்துச் செல்லவும் ஐஸ் உற்பத்தியின் தேவை அத்தியாவசியமானது. அபிவிருத்தி செய்யப்படாத கரைகளையும் நீண்ட தூர இடைவெளிகளையும் கொண்ட வடக்கு கிழக்கு மாகாணங்களில், ஆங்காங்கே பிடிக்கப்படும் கடல்சார் உற்பத்திகளை கொழும்பு போன்ற மைய நகரச் சந்தைக்கு எடுத்துச் சென்றாலே விற்க முடியும். இங்கிருந்து மீன் விற்பனைக்காகச் செல்லும் கூலர் வாகனங்களுக்கு இத்தொழிற்சாலைகள் மூலமே ஐஸ் உற்பத்தி செய்யப்படுகிறது. பேலியகொடை சந்தையிலிருந்து வரும் கூலர் வாகனங்கள் அப்பகுதியில் இருந்தே ஐஸ் எடுத்து வருவதும், உள்ளூர் முகவர்களுக்கும் அவர்களே விநியோகம் செய்வதும் இங்கு கவனிக்கப்படத்தக்கது.

**அமரசிங்கம் கேதீஸ்வரன்**



# பிராந்திய செய்திகள்



## அஸ்வெசும : வெளியான புதிய தகவல்

அஸ்வெசும திட்டத்திற்கான புதிய விண்ணப்பங்களுக்கான அழைப்பு எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் மேற்கொள்ளப்படும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதனைத் தெரிவித்தார்.

## பாடசாலை ஆரம்பிக்கும் திகதியில் மாற்றம்




அரசாங்க பாடசாலைகள் மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் மூன்றாம் தவணைக்கான இறுதிக் கட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணை பாடசாலை விடுமுறை கடந்த டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி முதல் 2024 பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதிவரை வழங்கப்பட்டிருந்தது.

எனினும் உயர்தர விவசாய விஞ்ஞான வினாத்தாளின் பகுதி 1 மற்றும் பகுதி 2 ஆகியவற்றை இவ்வருடம் மீள நடத்துவதற்கு பரீட்சை திணைக்களம் எடுத்த தீர்மானம் காரணமாக, பாடசாலை தவணை ஆரம்பிக்கும் திகதி தற்போது மாற்றப்பட்டுள்ளது.

விவசாய விஞ்ஞான வினாத்தாள் இரண்டாம் பாகம் வெளிப்படுத்தப்பட்டதை அடுத்து அதனை ரத்து செய்ய பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.

பின்னர் வினாத்தாளின் முதலாம் பாகத்தை இரத்து செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, இந்த ஆண்டுக்கான விவசாய வினாத்தாளின் இரண்டாம் பகுதி பெப்ரவரி 1ஆம் திகதி வியாழக்கிழமை காலை 08.30 முதல் 11.40 வரை மீண்டும் நடைபெற உள்ளது. முதல் பாகம் அதே நாள் பிற்பகல் 01.00 மணி முதல் 03.00 மணி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு குறித்து வெளியான அறிவிப்பு

2024 வரவு செலவு திட்டத்தில் முன்மொழியப்பட்ட 10,000 ரூபா சம்பள அதிகரிப்பின் முதற்கட்டமாக 5,000 ரூபா கொடுப்பனவு தொடர்பான பணத்தை திறைசேரி விடுவித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஊழியர்களின் சம்பளத்திற்காக தற்போது சுமார் 95 பில்லியன் ரூபா செலவிடப்படுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனவரி மாதம் முதல் இந்த பணம் மேலும் 7 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கும் எனவும், ஏப்ரல் மாதம் முதல் 10,000 ரூபா சம்பள அதிகரிப்புக்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதன் பின்னர் அரசாங்கம் 14 பில்லியன் ரூபாவை மேலதிகமாக செலவிடவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பணம் அச்சிடுவதும் கடன் வாங்குவதும் நிறுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில், செலவு மேலாண்மை மூலம் மட்டுமே குறித்த தொகையை சேமிக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## தேயிலை உரங்களின் விலைகள் குறைப்பு



தேயிலை பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்படும் அனைத்து T 750, T 709 மற்றும் T 200 உரங்களின் விலைகளை 2,000 ரூபாவினால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர (16) இந்த தீர்மானத்தை எடுத்ததாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, சந்தையில் கிடைக்கும் தேயிலை உரத்தின் விலை 50 சதவீதத்தால் குறைக்கப்படும். தற்போது சந்தையில் மேற்கூறிய உரங்களின் ஒரு மூட்டையின் விலை 13,000 ரூபாவை தாண்டியுள்ளது.

இதனால், T 750 மற்றும் T 709 தேயிலை உரங்களின் மூட்டை ஒன்றின் விலையை 7,735 ரூபாவாகவும், T 200 உரத்தின் விலை 5,500 ரூபாவாக குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்திற்கு சொந்தமான கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம் மற்றும் இலங்கை உர கம்பனி ஆகியவற்றின் தலைவர் கலாநிதி ஜகத் பெரேராவிற்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த உரச் சலுகை அனைத்து சிறு மற்றும் நடுத்தர தேயிலை உற்பத்தியாளர்களுக்கும் வழங்கப்படவுள்ளதுடன், பாரியளவிலான தேயிலை உற்பத்தி நிறுவனங்களுக்கு மேற்கூறிய அனைத்து உர வகைகளையும் 9,735 ரூபாவிற்கு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சில், தேயிலை உற்பத்தி செய்யும் எட்டு மாவட்டங்களின் தேயிலை உற்பத்தியாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் தேயிலை பயிர்ச்செய்கை தொடர்பான அனைத்து அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அரசாங்கத்திற்கு சொந்தமான உர நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்படும் தேயிலை பயிர்ச் செய்கைக்கான விசேட உரங்கள் தரம் வாய்ந்தவை என பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர். இந்த 2,000 ரூபா உரச் சலுகைக்கு மேலதிகமாக செலவிடப்பட்ட தொகை 1200 மில்லியன் ரூபாவாகும். அந்தத் தொகையை தேயிலை சபை ஏற்க வேண்டும். தேயிலை கைத்தொழில் முன்னேற்றத்திற்காக எமது நாட்டில் தேயிலை பயிர்ச்செய்கைக்கு உரமிடுவதை கட்டாயமாக்கும் நடவடிக்கையாக இந்த நிவாரணம் வழங்கப்படுவதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

## சட்டவிரோத வீடுகள், கட்டிடங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் தீர்மானம்



கொழும்பு நகரில் கால்வாய்களை வழிமறிக்கும் வகையில் கட்டப்பட்டுள்ள வீடுகள் மற்றும் கட்டிடங்களை அகற்றும் வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த கொழும்பு மாநகர சபை தீர்மானித்துள்ளது. கடந்த 18ஆம் திகதி அன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட கொழும்பு மாநகர சபையின் பணிப்பாளர் பொறியியலாளர் ஆர்.ஏ. டி.பி.ரணவக்க இதனை தெரிவித்தார்.

அண்மையில் பெய்த கடும் மழையினால் கொழும்பு நகரம் வெள்ளத்தில் மூழ்கியதன் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், அந்தந்த வீடுகளில் வசிக்கும் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகாத வகையில், நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் கலந்துரையாடி இவ்வாறான கால்வாய்களுக்கு அருகில் வீடுகளை கட்டியுள்ளவர்களை வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மட்டக்குளி, ஜேதவனய போன்ற பல இடங்களில் இவ்வாறானதொரு நிலை காணப்படுவதாகத் தெரிவித்த ரணவக்க, மிக விரைவில் அகற்றப்படவேண்டிய பகுதி இனங்காணப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான பணிகள் அடுத்தவாரம் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

## 80,000க்கும் அதிகமானவர்களின் நீர் விநியோகம் துண்டிப்பு



கடந்த வருடத்தில் 80,000க்கும் அதிகமான நீர் பாவனையாளர்களின் நீர் விநியோகம் கட்டணம் செலுத்தாமையால் துண்டிக்கப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, 30 இலட்சம் நீர் பாவனையாளர்களில் 80,970 பேருக்கு நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக சபையின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இவர்களில் 63,150 வீட்டு நீர் பாவனையாளர்களும் மற்றும் 17,820 பிற நீர் பாவனையாளர்களும் அடங்குவதாக அவர் தெரிவித்தார். இவ்வாறு நீர் விநியோகம் துண்டிக்கப்பட்ட நுகர்வோரிடமிருந்து 1,909 மில்லியன் ரூபா மீளப்பெற வேண்டியுள்ளதாக சபையின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, நீர் கட்டணத்தை செலுத்தாமையால் 6,118 மில்லியன் ரூபாவை சபை அறவிட வேண்டியுள்ளது. அவற்றுள் வைத்தியசாலைகளில் இருந்து 182 மில்லியன் ரூபாவும், பாடசாலைகளில் இருந்து 175 மில்லியன் ரூபாவும், இராணுவம் மற்றும் பொலிஸாரிடமிருந்து 116 மில்லியன் ரூபாவும் நீர் வழங்கல் சபை வசூலிக்க வேண்டியுள்ளது.

இதேவேளை, நீர் இணைப்புகளை துண்டித்துள்ள வாடிக்கையாளர்கள் செலுத்த வேண்டிய தொகையில் 25 வீதத்தை செலுத்தி மீண்டும் இணைப்பை பெற்று மீதி கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மேலும் தெரிவித்துள்ளது.



# சினி துளிகள்



## விஜய்க்கு கைகொடுத்த திரையுலகம் நயன்தாராவைக் கைவிட்டது ஏன்?





நடிகை நயன்தாராவின் அன்னபூரணி படத்தின் சர்ச்சை பெரிதளவில் ஆகிவிட்டது. ராமர் அசைவம் சாப்பிட்டார் என கூறியது தொடர்ந்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த ஒரு வசனத்தால் ஓடிடி தளத்தில் இருந்து அன்னபூரணி படத்தை அப்படியே நீக்கிவிட்டனர்.

இறுதியாக நடிகை நயன்தாரா மன்னிப்பு கேட்டார். இதுகுறித்து அறிக்கையும் நயன்தாரா வெளியிட்டு இருந்தார். இதன்மூலம் ஒட்டுமொத்த சர்ச்சைக்கும் முடிவு வந்தது. இதில் நயன்தாராவிற்கு ஆதரவாக இயக்குனர் வெற்றிமாறன் மட்டும் தான் துணை நின்றார்.

சென்சார் செய்யப்பட்ட திரைப்படத்திற்கு ஓடிடி நிறுவனம் இப்படி செய்யக்கூடாது. அது தவறு என கூறியிருந்தார். அதேபோல் நயன்தாராவின் ரசிகர்களும் அவருக்கு ஆதரவு தெரிவித்து இருந்தனர். மற்றபடி திரையுலகை சேர்ந்த யாரும் நயன்தாராவிற்கு துணை நிற்கவில்லை என்பது சோகமான விஷயம்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் விஜய் நடிப்பில் வெளிவந்த திரைப்படம் மெர்சல். இப்படத்தில் GST குறித்தும், கோவில்களுக்கு பதிலாக மருத்துவமனைகள் கட்டலாம் என விஜய் வசனம் பேசி இருந்தார். இதற்கு வடக்கில் இருந்து பெரும் எதிர்ப்பு விஜய்க்கும், மெர்சல் படத்திற்கும் எழுந்தது. அந்த நேரத்தில் ரஜினிகாந்த் போன்ற பல முன்னணி நட்சத்திரங்களும், திரையுலகை சேர்ந்தவர்களும் விஜய்க்கு ஆதரவு தெரிவித்து இருந்தனர்.

ஆனால், தற்போது முன்னணி நடிகையாக இருக்கும் நயன்தாராவிற்கு ஆதரவு தெரிவிக்க யாருமே வரவில்லை. நடிகருக்கு துணை நின்றவர்கள், நடிகைக்கு துணை நிற்கவில்லை. பிரிவினை பார்க்கிறார்களா என ரசிகர்கள் கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டனர்.





## ஆண்ட்ரியாவை துரத்திய ரசிகர்கள்

புதுச்சேரியில் ஆண்டுதோறும் காரைக்காலில் கார்னிவெல் விழா நடத்தப்படுகிறது. இந்த ஆண்டிற்கான விழாவில் நடிகையும் பிரபல பாடகியுமான ஆண்ட்ரியா கலந்துகொண்டார்.

நிகழ்ச்சி முடிந்தது. புறப்பட்ட ஆண்ட்ரியாவின் காரை மறைந்து செல்பி எடுக்க முயன்றனர் ரசிகர்கள். உடனே பொலீசார் அவரை சிரமத்திற்கிடையே பத்திரமாக மீட்டு அனுப்பி வைத்தனர்.

இருப்பினும் ரசிகர்கள் ஆர்வத்தில் ஆண்ட்ரியாவின் காரை விடாமல் துரத்திச்சென்றனர். இதனால் அந்த பகுதியே பரபரப்பானது.

மேலும் விழா முடிந்து ஒரே நேரத்தில் கூட்டம் முண்டியடித்து சென்றதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. அப்போது மக்கள் ரயில்வே கடக்கும் போதும் சென்னை ரெயில் வந்தது. அந்த சமயத்தில் மக்கள் பலரும் தண்டவாளத்தின் நடுவே சிக்கிக்கொண்டனர்.

அதனால் ரயில்வே கேட் உயர்த்தப்பட்டதால் மக்கள் வேகம் வேகமாக அங்கு இருந்து கிளம்பினார்கள். இதன் காரணம் அந்த பகுதியில் கொஞ்சம் நேரம் பதற்றம் நிலவியது.

## உடல் எடையைக் குறைத்த சூர்யா



ஒரு படத்திற்காக உடலை வருத்தி கொண்டு நடிப்பவர்கள் சிலர் உள்ளனர். அந்த லிஸ்ட்டில் இருப்பவர் தான் நடிகர் சூர்யா.

தற்போது இவர் சிறுத்தை சிவா இயக்கத்தில் உருவாகும் கங்குவா படத்தில் நடித்து வருகிறது. இப்படத்தில் சூர்யாவின் காட்சிகள் பெரும்பாலும் முடிவடைந்ததாக சினிமா வட்டாரங்களில் சொல்லப்படுகிறது.

இப்படத்தை தொடர்ந்து சூர்யாவின் 43 வது படத்தை பிரபல இயக்குனர் சுதா கொங்கரா இயக்குகிறார். இப்படம் தமிழக அரசியல் வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தி எதிர்ப்பு போராட்டத்தை மையமாக வைத்து படத்தின் கதை அம்சம் அமைந்து இருப்பதாக சொல்லப்படுகிறது.

சமீபத்தில் சூர்யா, ரசிகர் ஒருவர் உடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. அந்த புகைப்படத்தில் சூர்யா உடல் எடை குறைத்து வேற மாதிரியான லுக்கில் காணப்பட்டார்.

சூர்யா 43 படத்திற்காக தான் உடல் எடையை குறைத்துவிட்டாரா? என்று ரசிகர்கள் கருத்துக்கள் பதிவிட்டு வருகின்றனர்.

## சமூக வலைத்தளங்களில் இருந்து வெளியேறிய இயக்குனர்



நிவின் பாலி நடிப்பில் வெளிவந்த நேரம் படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் தான் அல்போன்ஸ் புத்திரன்.

இதனையடுத்து இவர் இயக்கிய பிரேமம் மாபெரும் வெற்றி பெற்றது. தற்போதும் அந்த திரைப்படம் Masterpiece என்று ரசிகர்களால் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

சமீபகாலமாக அல்போன்ஸ் புத்திரன் தனது சோசியல் மீடியா பக்கத்தில் நடிகர்களை குறித்து சர்ச்சை கூறிய கருத்துக்களை பதிவிட்டு வந்தார்.

இந்நிலையில் தற்போது அல்போன்ஸ் புத்திரன் தனது சோசியல் மீடியா பக்கத்தில் பதிவு ஒன்றை பதிவிட்டுள்ளார்.

அதில் அவர், "நான் இனி இன்ஸ்டாகிராம் மற்றும் முகநூலில் எந்த ஒரு பதிவும் பதிவிட போவதில்லை. காரணம் என்னவென்றால் நான் சோசியல் மீடியாவில் பதிவிடும் பதிவுகள் என் அப்பா, அம்மா, என்னுடைய சகோதரிக்கு பிடிக்கவில்லை. என் உறவினர்கள் அவர்களை பயமுறுத்துகிறார்கள்".

"நான் அமைதியாக இருந்தால் எல்லாரும் நிம்மதியாக இருப்பார்கள் என நினைக்கிறேன். அப்படியே இருக்கட்டும்" என்று அல்போன்ஸ் புத்திரன் பதிவிட்டு இருக்கிறார்.

# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி

32

இவ்வாறு திருகோணமலை மாவட்டத்திற்கும், விடுதலைப் புலிகள் தமக்குத் தேவையான பொருட்களை தருவித்துக் கொள்கின்றார்கள். இவற்றில் நீண்டகாலம் வைத்திருக்கக்கூடிய மருந்துப் பொருட்கள், சத்திரசிகிச்சை கூடங்களுக்குத் தேவையான பொருட்கள் முதன்மையாக அடங்குகின்றது. அதற்கான இடங்கள் இனம் காணப்பட்டு மருத்துவப்பிரிவு மருத்துவமனைகளை அங்கு அமைக்கின்றார்கள். இதனிடையே திருகோணமலையில் வெளிநாட்டு மருத்துவர்கள் அணிகள் வந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளுக்குள் சென்று மக்களுக்கு சிகிச்சை அளிக்கின்றார்கள். இதுவொரு புலனாய்வு நடவடிக்கை என்று தெரிந்திருந்தபோதும், மக்களுக்கு மருத்துவ சேவை அவசியமாகத் தேவைப்பட்டதால் விடுதலைப் புலிகள் இதுதொடர்பான அவதானத்துடன் அவர்களின் சேவைக்கு அனுமதி வழங்கியிருந்தார்கள்.

எனினும், ஒரு சில தமிழ் மக்கள் மூலமே தங்களுக்கு தேவையான புலனாய்வுத் தகவல்களை அவர்கள் திரட்டிக்கொண்டிருந்தார்கள் என்பதைப் பின்னர் அறிய முடிந்தது. இவர்களது நடவடிக்கை இவ்வாறு இருக்கையில், விடுதலைப்புலிகளும் திருமலை மாவட்டத்தில் இருந்துகொண்டு இலங்கையின் தென்பகுதிக்கான நடவடிக்கைகள் விடுதலைப் புலிகள் புலனாய்வு பிரிவினரால் திட்டமிடப்படுகின்றது. இலங்கையின் தலைநகரான கொழும்பு மற்றும் சுற்றுப்புற இடங்களில் தாக்குதல் நடாத்துவது இராணுவ அரசியலில் முதன்மையானவர்களை இனம்கண்டு அவர்களின் இருப்பிடங்களைக் கண்டறியும் ஒரு பிரிவும். இவ்வாறு தமிழ் மக்களுக்கு துரோகம் இழைக்கும் முதன்மையானவர்களை கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்கான ஒரு பிரிவு. அதிலும் கரும்புலி அணிகள் இவற்றிற்கெல்லாம் திருகோணமலை ஊடாகவே வெடி பொருட்களைக் கடத்தும் அணிகளின் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

இதற்கிடையே வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும், கிழக்கிலும் பல்வேறு இராணுவ நடவடிக்கைகளை அதாவது ஊடுருவல் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் படையினருக்கு பல்வேறு தகவல்களை வழங்கிவந்தவரும் விடுதலைப் போராட்டத்திற்கு பெரும் தடைக்கல்லாக இருந்தவருமான புளொட் மோகன் என அழைக்கப்படும் கந்தையா யோகராசா என்பவர் கொழும்பில் வைத்து பிஸ்ரல் குழுவினரால் ஏற்கனவே சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

சிறீலங்காவின் வன்னி மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலையில் மேற்கொள்ளப்பட்ட பல ஊடுருவித் தாக்குதல்களுக்கும் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவானவர்கள் சுட்டுக்கொல்லப்படுவதற்கும் பின்னால் மட்டுமல்ல, கருணா விடுதலைப் போராட்டத்திற்கு துரோகம் இழைத்து இயக்கத்தை விட்டு வெளியேற்றப்பட்டபோது கருணாவின் பாதுகாப்பு அளிப்பது உட்பட கருணாவின் பல நடவடிக்கைகளுக்கு பின்னே இந்தப் புளொட் மோகனே இருந்ததால், கொழும்பின் உச்ச பாதுகாப்பான பகுதியில் வைத்து 31.07.2004 அன்று பிஸ்ரல் குழுவினர் அவரைச் சுட்டுக் கொன்றிருந்தனர். எனினும், அதன் பின்னரும் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவானவர்கள் மீது தொடர்ந்த தாக்குதல்கள் சில மாதங்களில் ஏற்பட்ட சுனாமி காரணமாக சற்று ஓய்ந்திருந்தது. எனினும் அது அதிக காலம் நீடிக்கவில்லை. மீண்டும் சிறீலங்காப் படைப்புலனாய்வாளர்களினதும், ஒட்டுக் குழுக்களினதும் நடவடிக்கைகள் தொடரத் தொடங்கியதும், அதற்கு எதிரான நடவடிக்கைகளில் மீண்டும் பிஸ்ரல் குழுவினர் இறங்கினார்கள். இதன் ஒரு கட்டத்தில் சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமரும் 2005 ஒகஸ்ட் 12ல் சுட்டுக் கொல்லப்பட்டார். இவ்வாறான களையெடுப்புநடவடிக்கைகளுக்குதளமாக, கட்டளைப்பீடமாக திருகோணமலையே விளங்கியது.

இதேவேளை, கடலிலும் கடற் புலிகளிற்கும் சிறீலங்காக் கடற்படைக்கும் இடையில் சில மோதல்கள் நடைபெற்றன. இதன்போது எச்சரிக்கை அறிவிப்பாக போராளிகளால் றோடாப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. இதனைத்தொடர்ந்து மீண்டும் சிறீலங்காக் கடற்படையினரால் கடலில் மீன்பிடிக்க கடுமையான தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. திருகோணமலையில் ஆழ்கடல் சென்று தொழில் செய்ய முடியாத நிலைக்கு கடல் தொழிலாளர்கள் தள்ளப்பட்டனர். இத்துடன் பொருளாதாரத்தடை மக்கள் மீது திணிக்கப்படுகின்றது. பொருட்களுக்கு மீண்டும் கட்டுப்பாடுகள் போடப்படுகின்றன. இவ்வாறான பிரச்சினைகளை தளர்த்துமாறு சிறீலங்காப் படையினரிடம் விடுதலைப் புலிகள் தரப்பினரால் கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றன.

அதாவது மக்களுக்கான அத்தியாவசிய பொருட்கள் மீதான தடையை நீக்குமாறு கேட்கப்படுகின்றது. இதற்கு சம்மதிக்காத சிறீலங்கா அரசு மக்கள் மீது பல்வேறு கெடுபிடிகளை மேற்கொள்கின்றார்கள். சிறீலங்கா மீண்டும் போர் ஒன்றை முன்னெடுப்பதற்கு முனைப்புடன் செயற்படுகின்றது என்பதை படையினரின் சமாதான உடன்படிக்கைக்கு எதிரான இந்தச் செயற்பாடுகள் புரிய வைத்தன. சிறீலங்காவின் இந்த போர் முனைப்பை தடுக்கும் பிரகாரம் தொடங்குகின்றது மாவிலாற்றுப் பிரச்சனை. சம்பூர், சேனையூர், ஈச்சிலம்பற்று, புன்னையடி போன்ற விவசாயிகளினதும் இணக்கத்துடன் விடுதலைப் புலிகளால் சிங்கள கிராமத்திற்குச் செல்லும் மாவிலாறு அணை மீது இடைகட்டு கட்டப்பட்டு, ஆற்றுநீர் சிங்களக் குடியேற்றத்திற்கு செல்லாமல் தடுக்கப்பட்டு முற்றிலுமாக தமிழ் மக்களின் செயற்பாட்டிற்கு விடப்படுகின்றது.

இனித்தான் பிரச்சனை பூதாகரமாகின்றது. சமாதான



உடன்படிக்கைக்கு முரணாக சிறீலங்கா செயற்பட்டுக்கொண்டிருந்தபோதுதான், விடுதலைப் புலிகள் மாவிலாறு அணையை மூடுகின்றார்கள். போரினால் மட்டுமல்ல இயற்கைப் பேரனர்த்தமான ஆழிப்பேரலையால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கும் உதவுவதற்கு முனையாத சிறீலங்கா, அப்பாவி மக்கள் மீது கெடுபிடிகளை ஒரு போர்க்கால நிலை போன்று ஏற்படுத்திய நிலையில்தான், அதற்கு எதிராக விடுதலைப் புலிகள் மாவிலாறு அணை விவகாரத்தை கையிலெடுத்தார்கள். 2006ம் ஆண்டு யூலை 22ம் திகதி சிங்கள குடியேற்ற மக்களுக்கு செல்லும் தண்ணீருக்கான அணைகள் மூடப்பட்டன. இது மூடப்பட்டதும், இரு தரப்பினரும் சில காலம் சமரச நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஆனால், மக்களின் அடிப்படைப் பிரச்சினையை தீர்ப்பதற்கு கூட சிறீலங்கா இறங்கியோ, இணங்கியோ வராத நிலையில், பிரச்சினை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்குச் செல்கிறது.

இதன்போது ஏற்பட்ட இணக்கப்பாடுகளை அடுத்து மனிதாபிமான அடிப்படையில் அணையைத் திறந்து விடுவதற்கு விடுதலைப் புலிகள் சம்மதிக்கின்றனர். ஆனால், பேச்சுக்கள் மூலம் அணையை திறப்பதற்கு மறுத்த படையினர், தாக்குதல் மூலம் அணையைத் திறப்பதாக அறிவித்துவிட்டு கடுமையான முன்னேற்றத் தாக்குதல்களை நடத்தத் தொடங்கினார்கள். இந்நிலையில்தான் படையினரின் முன்னேற்ற நகர்வுகளை தடுத்து நிறுத்தும் நோக்கத்துடனும், திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் பலத்தினைக் காட்டுமுகமாகவும் ஒகஸ்ட் மாத ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் ஒரு வலிந்த தாக்குதலை மூதூர் பகுதியை இலக்குவைத்து மேற்கொள்கின்றார்கள்.

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் பலத்தினைக் காட்டுமுகமான தாக்குதலாக இது இருக்கவேண்டும் எனக் கருதிய விடுதலைப்புலிகள், சிறீலங்காப் படையினருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் இந்தத் தாக்குதலை நடத்துவதற்கு திட்டமிடுகின்றார்கள். புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் இதற்கான தாக்குதல் திட்டத்தினை தளபதி சொர்ணம் வகுத்துக்கொடுத்தார். தாக்குதல் கடல் வழியாகவும் தரை வழியாகவும் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டது. தரைப்பகுதியில் வெளிகளினூடாக கடந்து சென்று கட்டைபறிச்சான் ஜி.பி.எஸ். படைமுகாமினைத் தாக்கி அழித்து அங்கிருந்து 45ம் கட்டைபறிச்சான் படைமுகாம் சென்று தாக்குதல் நடாத்துவது.

கடல்வழியாகமூதூர் இறங்குதுறை மீது தாக்குதல் நடத்தி மூதூர் நகரத்தை மீட்பது. பின்பு அங்கிருந்து கொண்டு தம்பலகாமம், ஆலங்கேணி பகுதிகள் மீது தாக்குதல் நடத்தி மூதூரின் பிரதேசத்தை முற்றுமுழுதாக விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கான திட்டம் தீட்டப்பட்டிருந்தது. புலனாய்வு தகவல்களைக் கொண்டு இழப்புக்களை குறைத்து படையினருக்கு பெரும் அழிவை ஏற்படுத்தும் வகையில் தாக்குதல் திட்டம் மிகக் கவனமாக வகுக்கப்பட்டிருந்தது. எனினும், மூதூர் பிரதேசம் என்பது பெரிய பிரதேசம். தமிழ் - முஸ்லீம் மக்கள் இணைந்து வாழ்கின்ற பிரதேசமாக காணப்படுகிறது. இதில் முஸ்லீம் மக்கள் தாக்குதல் நடத்தும் இடங்களில் அதிகம் வசித்து வந்தார்கள்.

எனவே, ஒரு வலிந்த தாக்குதல் திட்டமாக வடிவமைக்கப்பட்ட இந்த தாக்குதல் திட்டம், இறுதியில் ஒரு முறியடிப்பு தாக்குதல் வடிவமாக மாற்றப்பட்டது. ஆனால், எதிர்பார்த்தற்கு மாறாக தாக்குதல் தொடங்குவதற்குள்ளாகவே மூதூர் பிரதேசத்தில் உள்ள படைமுகாம்களில் இருந்து படையினர் எல்லோரும் அங்கிருந்து தப்பியோடிவிட்டார்கள். அருகில் குடியேற்றப்பட்டிருந்த சிங்கள மக்கள் கூட தாக்குதல் அச்சத்தால் அங்கிருந்து தப்பியோடிவிட்டார்கள். எனினும், மூதூரில் குறிப்பிட்டு கூறக்கூடிய படைமுகாம்கள் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டு படையினரின் இராணுவ தளபாடப் பொருட்கள் பெருமளவில் கைப்பற்றப்பட்டிருந்தன. மூதூர் பிரதேசம் விடுதலைப் புலிகளின் கைகளில் முழுமையாக வந்தடைந்தது.

இருந்தும் மீட்கப்பட்ட இடங்களை தக்கவைப்பது என்பது கேள்விக்குரிய விடயமாகின்றது. அதாவது, விடுதலைப் புலிகளின் கைகளுக்குள் இலகுவாக விழுந்த பரந்த பிரதேசத்தில் அரண் அமைத்து தக்கவைப்பதற்கு காலம் மட்டுமல்ல, போராளிகளும் போதாமல் இருந்தனர். அதிக இழப்புக்களும் அழிவுகளுமின்றி மிக இலகுவாக வெற்றி கொள்ளப்பட்ட பிரதேசத்தை தக்கவைக்க முடியாமல் போராளிகள் தங்கள் பழைய நிலைகளுக்கு திரும்பவேண்டிய ஒரு இக்கட்டான நிலை எழுந்தது.

தொடரும்...

# காலனித்துவத்தின் கோரமுகமும் இலங்கையில் அது பதித்த முத்திரைகளும்



சீனக் கடற்படை தளபதி சாங்கை (Zheng) விபரிக்கும் ஓவியம்

இன்று இலங்கை எதிர்நோக்கியுள்ள வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்கு பல்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன. இது தற்செயலாக வெடித்த ஒன்றோ தற்காலிகமான ஒன்றோ அல்ல. இதன் வரலாற்று வேர்கள் ஆழமானவை, நீண்டவை. இந்நிலைமைக்கு நிதி நிர்வாகத் தவறுகளை மாத்திரம் காரணம் காட்டமுடியாது. அதனை விடவும், 1948 முதல் இதுவரை இலங்கையை ஆட்சிசெய்த செய்த அனைத்து தலைவர்களும் நடத்திய இனவாத அரசியலுக்கு நாடு கொடுத்த விலையே இதுவாகும். இதனை விளக்குவதாகவே இக்கட்டுரை அமைகிறது. இதன்படி, 1915க்கு முன்னர் இருந்து இன்றுவரை சிறுபான்மைத் தேசியங்கள் மீது இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இன வன்முறை தாக்குதல்களையும், அவற்றின் பின்னணியையும் வரலாறு பொருள் முதல்வாத கண்ணோட்டத்தில் நேரடி அனுபவங்கள் ஊடாகவும், நூல்கள், செய்திகள் உள்ளிட்ட ஏனைய ஆதாரங்கள் வழியாகவும் இந்தத் தொடர் ஆராய்கின்றது.

**இலங்கையில் வெளிக்காரணிகளின் தாக்கங்கள்**

அந்நியர் ஆட்சியும் வெளிநாடுகளின் செல்வாக்கும் இலங்கைக்கு புதிய விடயங்கள் அல்ல. இலங்கை சிலசமயங்களில் தென்னிந்திய மன்னர்களின் படையெடுப்புக்கு உள்ளாகியிருக்கிறது. இத்தகைய நிலப்பிரபுத்துவத்தால் யுத்தங்கள் இனவாத ரீதியில் திரித்து விளக்கப்படுகின்றன. அது மாத்திரமல்ல 1411 இல் ஒருதடவை சீனக் கடற்படையின் தாக்குதலுக்கும் இலங்கை உள்ளானது. அப்போது நீராவிக் கப்பல் இன்னும் புழக்கத்துக்கு வராத சமயத்தில் ஒப்பரும் மிக்காரும் இல்லாதபடி பெரிய கடற்படையை மிங் வம்ச (Ming) ஆட்சியின் கீழ் சீனா கொண்டிருந்தது. அதன் வர்த்தகக் கப்பல்கள் இலங்கைக் கடற்கொள்ளையர்களால் தாக்கப்பட்டது. இதனை அப்போதைய இலங்கையின் கோட்டை மன்னன் அழகேஸ்வரா (அழகக்கோனாரா) தடுக்கவில்லை.

இவ்விடத்தில் இராஜதந்திர ரீதியாக பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதற்காக சீனக் கடற்படைத்தளபதி செங் (Zheng) மன்னனை சந்திக்க சென்றபோது அவனை தந்திரமாக சுற்றிவளைத்து கொல்வதற்கும் சீனக் கப்பல்களை கொள்ளையடிப்பதற்கும் அழகேஸ்வரா முயன்றான். அதனால் ஆத்திரமடைந்த சீனக் கடற்படைத் தளபதி செங், கோட்டை மீது தாக்குதலை நடத்தி மன்னன் அழகேஸ்வராவையும் அவனது குடும்பத்தினரையும் அரச பிரதானிகளையும் கைது செய்து சீனாவுக்கு - நான்ஜிங்கிற்கு கொண்டு சென்று யோங்கிள் பேரரசரிடம் (Yongle Emperor) ஒப்படைத்தான். சீன மன்னன் அவர்களை எச்சரித்து மன்னித்து விடுதலை செய்து இலங்கைக்கே திருப்பி அனுப்பிவிட்டான். சீனாவுக்கு இலங்கையை ஆக்கிரமிக்கும் எண்ணம் இருக்கவில்லை.

**தென்னிந்தியாவுடனான உறவு**



Yongle Emperor

சிற்சில குட்டி முஸ்லிம் அரசுகள் பேருவளை போன்ற பகுதிகளில் அவ்வப்போது தோன்றி மறைந்தாலும் கூட, இந்தியாவைப்போல் முஸ்லிம் மன்னர்களின் ஆட்சி இலங்கையில் நிலவவில்லை. எனினும் முஸ்லிம் மன்னர்கள் இந்தியாவில் கோலோச்சிய காலத்தில் இங்கு இஸ்லாம் மதம் வேகமாகப் பரவியது என்பதை மறுப்பதற்கில்லை. அதேவிதமாக தென் இந்தியாவில் தமிழ் மன்னர்களின் பலம் அதிகரித்திருந்தபோது அதன் தாக்கம் இலங்கையிலும் எதிரொலித்தது. உலகில் தோன்றிய முதலாவது மொழி இதுதான் என எவராலும் கூற முடியாது. எத்தனையோ மொழிகள் தோன்றி மறைந்திருக்கின்றன. இன்று நிலைத்திருக்கின்ற உலகின் பழைய மொழியான தமிழ், தொடர்ச்சியாக பல்லாயிரம் ஆண்டுகள் இலங்கைக்கு அருகில் இருக்கும் இந்தியாவில் மையம் கொண்டிருந்ததால் அதன் தொடர்ச்சி இலங்கையிலும் நீடித்தது. ஆயினும் இலங்கையில் காலனித்துவத்துக்கு முந்தைய காலப்பகுதியில் இருந்த அரசியல், பொருளாதார, சமூக, கலாசாரக் கட்டமைப்புகள் இலங்கைக்கே உரிய தீவுத் தன்மை கொண்டவையாக இருந்தன. இந்தியாவிலிருந்தும் பின்னர் சிறிதளவு அரேபியாவில் இருந்தும் வந்த அனைத்து விடயங்களும் இலங்கையை செழுமைப்படுத்தியதுடன் இலங்கைத் தன்மையைப்பெற்றன. சிங்கள மொழியும், தமிழ் மொழியும், சைவமும், பௌத்தமும் பின்னர் இஸ்லாமும் இச்சின்னஞ் சிறிய தீவில் பன்னெடுங்காலம் சக ஜீவனம் நடத்தின.

நிலப்பிரபுத்துவ காலத்துக்கே உரிய மன்னருக்கிடையிலான போர்கள் இங்கும் ஒரு போக்காக இருந்தபோதும் சில சமயங்களில்தான் அவை மதம்சார்ந்த, மொழிசார்ந்த யுத்தங்களாக இருந்தன. அதுவும் குறிப்பாக பெரும்பாலும் தென்னிந்தியப் படையெடுப்பின் போது மாத்திரம் தான். பெரும்பாலான இந்திய மன்னர்கள் இலங்கை மன்னர்களின் பாதுகாவலர்களாகவும் நண்பர்களாகவும் உறவினர்களாகவுமே இருந்து வந்துள்ளனர். அசோக மன்னன், இலங்கை மன்னனான தேவநம்பிய திஸ்ஸவுடன் நட்புறவு பாராட்டி அவன் மூலம் பௌத்தமதத்தை பரப்பியமை, பௌத்த, இந்து மத பிக்குகளும் குருக்களும், சேனாதிபதிகளும், சிற்பிகளும் கட்டடக் கலைஞர்களும் தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு இலங்கை மன்னர்களுக்கு சேவை செய்தமை, வாரிசுரிமைப் போர்கள் வெடித்தபோதும் எதிரி மன்னனை வெற்றி கொள்வதற்கும் தென்னிந்திய மன்னர்களின் துணையை நாடியமை, தென்னிந்திய மன்னர்களுக்கு போரின்போது துணையாக தமது படைகளை அனுப்பிய சந்தர்ப்பங்கள், தென்னிந்திய மன்னர்களின் புதல்விகளை திருமணம் செய்து கொண்டமை, மன்னர் வாரிசுகள் இல்லாத சமயத்தில் தென் இந்திய மன்னர்களை வரவழைத்து அவர்களுக்கு மகுடம் சூட்டியமை போன்ற பல்வேறு உதாரணங்களை இதற்கு சான்றாகக் கூறலாம். ஐரோப்பியர்கள் இலங்கையை ஆக்கிரமிக்கும்வரை இலங்கை மீதான வெளிக்காரணிகளின் செல்வாக்கு அனைத்துமே ஆசியத் தன்மை கொண்டதாக இருந்தது.

**ஆசியாவின் வீழ்ச்சியும் ஐரோப்பாவின் எழுச்சியும்**

போர்த்துகேயர் இலங்கையில் காலடி எடுத்துவைக்கும் போது கூட ஆசியாவே ஐரோப்பாவைவிட உயர்ந்த நிலையில் இருந்தது. ஐரோப்பாவில் கிரேக்க ரோம காலத்தை விட உயர்ந்த நிலையை ஆசியா வகித்தது. கிரேக்கத்தில் பகுத்தறிவுவாதமும் மதவாதமும் செல்வாக்கு செலுத்துவதற்கு முன்பே ஆசியாவில் அவை செல்வாக்குச் செலுத்தின. ஆயினும் ஐரோப்பிய வரலாற்றாசிரியர்கள் பலர் இனவாத ரீதியில் வரலாற்றைச் சித்தரித்து எம்மை நம்பவைக்கின்றனர். ஐரோப்பிய மேலாதிக்கத்தின் தொடக்கம் கொலம்பஸின் பயணத்துடன் தொடங்கியது என்று மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகிறது. எரிக் வுல்பி Eric Wolfe "வரலாறு இல்லாத மக்கள்" என ஆசியர்களை வர்ணித்தார். எரிக் ஜோன்ஸ் (Eric Jones) டேவிட் லாண்டஸ் (David Landes), மைக்கேல் மான் (Michael Mann) ஆகியோர் 'மேற்கத்திய மேன்மைக்கு' ஐரோப்பியர்களின் சிறிய குடும்ப அமைப்பு முறையை அடிப்படையாகக் கொண்ட உயர்ந்த ஐரோப்பிய கலாசாரமே இயந்திரமாக அமைந்தது என தம்பட்டமடிக்கின்றனர். கொலம்பசுக்குப் பிந்தைய சகாப்தம் பற்றிய பாரம்பரிய விளக்கங்களில், ஐரோப்பாவே உலக வரலாற்றின் மையமாகவும், "மேற்கத்திய நாகரிகத்தை" பரப்புவதற்காகவே அவர்கள் ஆசியாவுக்கு வந்தார்கள் எனவும் பரப்புரை செய்யப்படுகிறது.

உண்மையில் இந்த வணிக யுகத்தில் ஆசியாவின் ஐந்து பெரிய பேரரசுகள் எழுச்சியுற்றன. அவையாவன: ஓட்டோமான்கள் Ottomans, (1300-1922), சஃபாபிட்கள் Safafids (1501-1722.) முகலாயர்கள் Mughals (1526-1757), மிங் Ming (1368-1644) மற்றும் கியூங் Qing (1644-1911). புராதன ரோமா சாம்ராச்சியத்தை இவை விஞ்சின. இவற்றிற்கு வெகுகாலத்துக்கு முன்னரே கி.மு. 3 ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்னதாக தமிழகத்தை கொண்டிருந்த சோழ வம்சப் பேரரசு உலக வரலாற்றில் மிக நீண்ட காலம் ஆட்சி செய்த வம்சங்களில் ஒன்றாகும்.

இப் பெரிய, செழிப்பான பேரரசுகள் ஸ்திரத்தன்மை மற்றும் ஒப்பீட்டளவில் அமைதியை வழங்கின. இது மக்கள் தொகை வளர்ச்சியை எளிதாக்கியது மற்றும் உற்பத்தியின் அதிகரிப்புக்கு ஏற்றுமதி நன்மைகள் மற்றும் ஒப்பீட்டளவில் சுதந்திர வர்த்தகத்தின் மண்டலங்களை விரிவுபடுத்தியது. ஆசியாவிற்குள், இந்தியாவும் சீனாவும் முக்கியமான உற்பத்தி மையங்களாக இருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை இவ்விரு நாடுகளும் சாதகமான வர்த்தக நிலைகளை அனுபவித்த நாடுகளாகத் திகழ்ந்தன. உருளைக்கிழங்கு, மக்காச்சோளம் மற்றும் வேர்க்கடலை போன்ற லத்தீன் அமெரிக்கப் பயிர்களின் அறிமுகத்தால் இவ்விரு நாடுகளும் பெரிதும் பயனடைந்தன.

உண்மையில் கூறுவதானால் ஆசியாவின் இயல்பான வளர்ச்சியும் கலாசார விழுமியங்களும் ஐரோப்பியர்களின் ஆக்கிரமிப்பால் தடைப்பட்டும் திரிபடைந்தும் போயின. அதன் பின்னர் ஆசிய ஆபிரிக்க நாடுகள் கொள்ளையடிக்கப்பட்டன, அவற்றின் வளங்கள் சூறையாடப்பட்டன. அது மாத்திரமல்ல, ஆபிரிக்காவிலிருந்து கறுப்பர்கள் அடிமைகளாக பிடித்துச் செல்லப்பட்டார்கள். அடிமை முறை ஒழிக்கப்பட்டதும் இந்தியாவிலிருந்தும் சீனாவிலிருந்தும் நவீன அடிமைகள் ஏமாற்றி கொண்டுசெல்லப்பட்டார்கள். வர்த்தக உரிமை, மத உரிமை, ஜனநாயகம் என்ற பெயரில்தான் இத்தனை கொடுமைகளும் நடந்தேறின, இன்றும் நடந்தேறிக்கொண்டிருக்கின்றன.

ஐரோப்பாவிலே கைத்தொழில் புரட்சி ஏற்படாமல் ஆசியாவில் அது வெடித்திருந்தால் உலகப்போக்கே மாறியிருக்கும். இதைவிட உயர்ந்த சகிப்புத்தன்மைகொண்ட நாகரிகம் தழைத்திருக்கும். ஆனால் ஆசியா நிலப்பிரபுத்துவ பிளவுகளால் மாத்திரமல்ல சாதி, மத, மொழிப் பூசல்களாலும் கூட செல்லரித்துபோய்க்கொண்டிருந்தது.

ஐரோப்பா முழுவதும் ஒரே மதம் (கிறிஸ்துவ மதம் - உட்பிளவுகள் இருந்தாலும் கூட) ஆதிக்கம் செலுத்தியது. அது நீண்டகாலம் போப் ஆண்டவர் தலைமையில் பகுத்தறிவையும் விஞ்ஞானத்தையும் மூர்க்கமாக தடுத்து வந்தது. அதில் 1500 களில் புரட்டஸ்தாந்து மதம் உடைவை ஏற்படுத்திய பின்னரே பகுத்தறிவு ரீதியான சிந்தனையும் விஞ்ஞானமும் வளர்ந்து கைத்தொழில் புரட்சி வெடிப்பதை சாத்தியமாக்கியது. இப்படியான ஒரு உடைவு ஆசியாவில் நடைபெறவில்லை. இங்கு மூட நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்ட சக்திகள் மீதான அதீத நம்பிக்கையும் ஆழ வேரூன்றி நிலப்பிரபுத்துவ சமூகத்தை உடைத்துக்கொண்டு ஒரு முதலாளித்துவப் புரட்சிவெடிப்பதைத் தடை செய்தது. இவ்வாறு ஆசியாவின் எழுச்சிக்காலம் மாறி தேக்க நிலையில் அது திண்டாடிக் கொண்டிருக்கும்போதுதான் ஐரோப்பாவில் முதலாளித்துவப் புரட்சி வெடித்தது. ஐரோப்பாவின் யுகம் தொடங்கியது. அதன் இராட்சத பலத்தின் முன்னால் செல்லரித்துப்போன நிலப்பிரபுத்துவம் மெல்ல மெல்ல மண்டியிட நேர்ந்தது.

காலனித்துவத்தின் ஆரம்பகாலம் கொடுமைமிக்கதாய் இருந்தது. போர்த்துகேயர் இலங்கையில் காலடி வைப்பதற்கு 13 வருடங்களுக்கு முன்னர் புதிய உலகான அமெரிக்காவில் கொலம்பஸ் 1492 ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி காலடி பதித்து அமெரிக்காவை ஐரோப்பாவுக்கு அறிமுகப்படுத்திய பின்னர், அங்கு படையெடுத்த ஐரோப்பியர், அங்கு வாழ்ந்த வளர்ச்சி குன்றிய மக்கள் சமூகங்களைக் கொன்றுகுவித்து, அவர்களின் பொன்னையும் வெள்ளியையும் கொள்ளை அடித்தனர்.

13ஆம் பக்கம் பார்க்க...

பி.ஏ.காதர்

# உலக நீதி : காசாவும் முள்ளிவாய்க்காலும்



"அனைத்துலக நீதியின் மாண்பு தராசில் தொங்கிக்கொண்டிருக்கிறது" இவ்வாறு அனைத்துலக நீதிமன்றத்தில் வைத்துக் கூறியிருப்பவர் தென்னாபிரிக்காவின் பிரதிநிதி. காசாவில் இஸ்ரேல் புரியும் இனப்படுகொலைக்கு எதிராகத் தென்னாபிரிக்கா உலக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறது. அந்த வழக்கின் தொடக்கத்தில் மேற்கண்டவாறு கூறப்பட்டிருக்கிறது. உலக நீதி மட்டுமல்ல மேற்கு நாடுகளின் அரசியல் அறமும் கூட தராசில் வைக்கப்பட்டிருக்கிறது. முழு உலகத்துக்கும் ஜனநாயகம், மனித உரிமைகள் போன்றவற்றின் மாண்பைக் குறித்து வகுப்பெடுக்கும் மேற்கு நாடுகளின் அரசியல் அறத்தை மிக இளைய ஜனநாயகங்களில் ஒன்று ஆகிய தென்னாபிரிக்கா கேள்விக்கு உள்ளாக்கியிருக்கிறது. காசாவில் இனப்படுகொலை நடந்து கொண்டிருக்கும் பொழுதே, ரத்தம் காய முன்பே, தென்னாபிரிக்கா வழக்குத் தொடுத்திருக்கின்றது. அதுபோல ஏற்கனவே மற்றொரு ஆபிரிக்க நாடாகிய காம்பியா, மியான்மரில் ரோஹிங்கா முஸ்லிம்களுக்காக நீதி கேட்டு 2019 ஆம் ஆண்டு அனைத்துலக நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்தது.

அனைத்துலக நீதிமன்றம் எனப்படுவது ஐநாவின் ஆறு பிரதான உறுப்புகளில் ஒன்று. ஐநாவின் நீதி பரிபாலனக் கட்டமைப்பு அது. ஐநாவின் ஏனைய உறுப்புக்கள் நியூயோர்க்கில் உள்ளன. ஆனால் அனைத்துலக நீதிமன்றம் நெதர்லாந்தின் தலைநகரமான ஹேக்கில் அமைந்துள்ளது. ஐநாவின் சுயாதீனமான உறுப்பாக அது கருதப்பட்டாலும் அதன் தீர்ப்புக்களின் அடுத்தடுத்த கட்டங்களைத் தீர்மானிப்பது ஐநா பொதுச் சபையும் பாதுகாப்புச் சபையுந்தான். பாதுகாப்புச் சபையில் சக்திமிக்க நாடுகளுக்கு வீற்றோ அதிகாரம் உண்டு. எனவே அங்கு விவாதிக்கப்படும் தீர்ப்புகளின் மீது சக்தி மிக்க நாடுகள் வீற்றோ வாக்கைப் பிரயோகிக்க முடியும். ரோஹியங்கா முஸ்லிம்களின் விடயத்தில் மியான்மருக்குச் சார்பாக சீனா அவ்வாறு வீற்றோ வாக்கைப் பிரயோகித்திருக்கிறது. அதுபோலவே இஸ்ரேலுக்கு எதிரான ஐநா தீர்மானங்களின் போதும் அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆதரவாக தன்னுடைய வீற்றோ அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கிறது. ஐநாவின் வரலாற்றிலேயே அமெரிக்கா அதிகம் எண்ணிக்கையிலான வீற்றோ வாக்குகளைப் பிரயோகித்தது இஸ்ரேலுக்கு ஆதரவாகத்தான் என்று ஒரு கணக்கு உண்டு.

எனவே ஐநாவின் உறுப்புகளில் ஒன்று என்ற அடிப்படையில் அனைத்துலக நீதிமன்றம் ஐநாவுக்குள்ள எல்லா வரையறைகளையும் பலவீனங்களையும் இயலாமைகளையும் கொண்டிருக்கும். இந்த விளக்கத்தின் பின்னணியில் வைத்தே, குறிப்பாக மியான்மருக்கு எதிராக காம்பியா தொடுத்த வழக்கின் கடந்த நான்கு ஆண்டுகால அனுபவத்தின் பின்னணியில் வைத்தே தென்னாபிரிக்கா இஸ்ரேலுக்கு எதிராக தொடுத்திருக்கும் வழக்கையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ரோஹியங்கா முஸ்லிம்களுக்கு கடந்த நான்கு ஆண்டுகளாக பொருத்தமான நீதி வழங்கப்படவில்லை. ஐநா உருவாக்கப்பட்டதிலிருந்து அது பெருமளவுக்கு இனப்படுகொலைகளின் பார்வையாளராகத்தான் இருந்து வந்துள்ளது. ஐநாவின் இயலாமையை, கையாலாகாத்தனத்தை நிரூபிக்கும் ஆகப்பிந்திய இனப்படுகொலைக் களந்தான் காசா. தென்னாபிரிக்கா தொடுத்திருக்கும் வழக்கின் மூலம் பலஸ்தீனர்களுக்கு நீதி கிடைக்குமா? அல்லது அந்த வழக்கு ஐநாவின் கையாலாகாத்தனத்தை மீண்டும் ஒரு தடவை நிரூபிக்குமா?

ஏனெனில், உலகில் தூய நீதி என்று எதுவும் கிடையாது இருப்பதெல்லாம் அரசியல் நீதிதான். நீதிபதிகள் தனிப்பட்ட முறையில் நீதியாக நடக்கலாம். ஆனால் அந்த நீதியை நடைமுறைப்படுத்தப்போவது அரசுகள்தான். அரசுகள், நலன்களின் அடிப்படையில்தான் முடிவுகளை எடுக்கும். அரசியலில் அறம் நீதி என்பவையெல்லாம் கிடையாது. நிலையான ராணுவப் பொருளாதார நலன்கள்தான் உண்டு. அது சார்ந்த முடிவுகள்தான் உண்டு. அதனால்தான் அமெரிக்க அறிஞராகிய நோஆம் சொம்ஸ்கி பின்வருமாறு சொன்னார். அரசியல் அறத்தைக் கடைப்பிடிக்கும் காலம் வரும்வரை இனப்படுகொலை என்ற சொல்லை அகராதியில் இருந்து எடுத்துவிடுவதே நல்லது என்று.

தென்னாபிரிக்கா தொடுத்திருக்கும் வழக்கு இஸ்ரேலுக்கு மட்டும் எதிரானது அல்ல. இஸ்ரேலை ஆதரிக்கும் எல்லா மேற்கு நாடுகளுக்கும் எதிரானதுதான். அனைத்துலக நீதிமன்றத்தை ஸ்தாபிக்கும்பொழுது அதில் முக்கிய பங்களிப்பை நல்கியது அமெரிக்காவும் பிரித்தானியாவுந்தான். அதே நாடுகள் இப்பொழுது தென்னாபிரிக்காவின் நகர்வை ஆதரிக்கவில்லை. எந்த ஒரு மேற்கத்திய நாடும் இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் அனைத்துலக நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா தொடுத்திருக்கும் வழக்கை ஆதரிக்கவில்லை. ஆனால் அதே மேற்கு நாடுகள்தான் ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக தீர்மானங்களை நிறைவேற்றி வருகின்றன. இதை எப்படி விளங்கிக்கொள்வது?

இஸ்ரேலுக்கு எதிராக வழக்குத் தொடுத்திருக்கும் தென்னாபிரிக்காவும் மியான்மருக்கு எதிராக வழக்குத் தொடுத்திருக்கும் காம்பியாவும் ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ளன. இந்த நாடுகள் எவையும் உக்ரைனில் ரஷ்யா முன்னெடுக்கும் ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து வழக்கு தொடுக்கவில்லை. அது மேற்கு நாடுகளுக்கு எதிரான ஆபிரிக்க நிலைப்பாடு. ரஷ்யா ஆபிரிக்க கண்டத்தை அதிகம் அரவணைத்து வைத்திருக்கின்றது. அங்குள்ள முன்னாள் பிரெஞ்சுக் கொலனிகளில் நடக்கும் ராணுவச் சதிப் புரட்சிகளின் பின்னணியில் ரஷ்சியாவின் மறைகரங்கள் இருப்பதாக ஊகங்கள் உண்டு.

அதேசமயம் காசாவில் நடப்பது இனப்படுகொலை என்று சொல்லாத மேற்கு நாடுகள், அதற்கு எதிராக வழக்குத் தொடுத்திருக்கும் தென்னாபிரிக்காவை ஆதரிக்காத மேற்கு நாடுகள், ரஷ்ய - உக்ரைன் போரில் ரஷ்யா இனப்படுகொலை செய்வதாகக் குற்றம் சாட்டின. போர் தொடங்கிய குறுகிய காலத்துக்குள்ளேயே அமெரிக்கா அதை இனப்படுகொலை என்று சொன்னது. அது ரஷ்யாவுக்கு எதிரான அமெரிக்காவின் நிலைப்பாடு.

பேரரசுகள் மட்டுமல்ல சிறிய அரசுகளும்கூட அறம் சார்ந்து அரசியல் முடிவுகளை எடுப்பதில்லை. உதாரணமாக தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகியபொழுது, பலஸ்தீனம் தமிழ் மக்களுடன் நிற்கவில்லை. பாலஸ்தீன அதிகார சபையானது மஹிந்த ராஜபக்சவின் நண்பனாகத்தான் காணப்படுகின்றது. 2009க்கு பின்னர் 2014ஆம் ஆண்டு பாலஸ்தீனம் மகிந்தவிற்கு அந்த நாட்டின் உயர் விருதாகிய "பலஸ்தீன நட்சத்திரம்" என்ற விருதை வழங்கியது. அங்குள்ள வீதி ஒன்றுக்கும் அவருடைய பெயரைச் சூட்டியது. அதாவது ஈழத் தமிழர்களால் இனப்படுகொலை புரிந்தவர் என்று குற்றஞ்சாட்டப்படும் ஒருவருக்கு பலஸ்தீனம் நாட்டின் உயர் விருதை வழங்கியிருக்கிறது. இதை எப்படி விளங்கிக் கொள்வது?

அப்படித்தான் கியூபாவும். ஒரு காலம் போராடும் இயக்கங்களுக்கு அது முன்மாதிரியாக இருந்தது. ஈழப் போராட்ட இயக்கங்கள் சில தமது பொறுப்பாளர்களுக்கு கஸ்ட்ரோ என்று பெயர் வைத்தன. ஆனால் 2009க்கு முன்னரும் பின்னரும் குறிப்பாக ஐநாவில் கியூபா யாருடைய பக்கம் நிற்கின்றது? ஐநா தீர்மானங்களின் போது கியூபா அரசாங்கத்திற்கு ஆதரவாகத் தான் வாக்களித்து வருகின்றது. இதை எப்படி விளங்கிக் கொள்வது?


அதாவது மேற்கண்டவைகளைத் தொகுத்துப் பார்க்கும்போது தெளிவாக தெரிவது என்னவென்றால், சக்தி மிக்க நாடுகளோ அல்லது சிறிய நாடுகளோ எவையானாலும் அறத்தின் பாற்பட்டோ நீதியின் பாற்பட்டோ முடிவுகளை எடுப்பது குறைவு. பெருமளவுக்கு நிலையான அரசியல் நலன்களின் அடிப்படையில்தான் அவை முடிவுகளை எடுக்கின்றன. இப்படிப்பட்டதொரு குரூர உலகில் பலஸ்தீனர்களுக்கு அனைத்துலக நீதிமன்றம் எப்படிப்பட்ட ஒரு நீதியை வழங்கும்?




தென்னாபிரிக்காவின் நகர்வை, ஆபிரிக்கக் கண்டத்தில் தற்பொழுது மேலோங்கிக் காணப்படும் மேற்கத்திய நாடுகளுக்கு எதிரான உணர்வுகளின் பிரதிபலிப்பாகவும் விளங்கிக் கொள்ளலாம். எனினும் எல்லாவிதமான வாதப்பிரதிவாதங்களுக்கும் அப்பால் அது இனப்படுகொலைக்கு உள்ளாக்கி கொண்டிருக்கும் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவது. தாங்கள் தனித்துவிடப்படவில்லை என்ற உணர்வை அது அவர்களுக்கு கொடுக்கும். இந்த விடயத்தில் பலஸ்தீனர்கள் ஈழத் தமிழர்களை விடவும் பாக்கியசாலிகள் என்று கூறலாமா?

ஏனெனில், இறுதிக்கட்டப் போரில் வன்னி கிழக்கில் தமிழ் மக்கள் சுற்றி வளைக்கப்பட்டிருந்தார்கள். யாரும் உதவிக்கு வரவில்லை. எந்த ஒரு நாடும் உத்தியோகபூர்வமாக அவர்களை ஆதரிக்கவில்லை. தென்னாபிரிக்கா ஆதரிப்பதாகக் கூறப்பட்டாலும் நடைமுறையில் எதுவும் நடக்கவில்லை. தனது சேவைக் காலத்தில் தான் கண்ட மிக மோசமான நரகம் அதுவென்று அப்பொழுது ஐ.சி.ஆர்.சியின் தென்னாசியாவுக்குப் பொறுப்பான அதிகாரி கூறினார். உதவிக்கு யாரும் வராத அந்த ஒடுங்கிய கடற்கரையில் தனித்து விடப்பட்டிருந்த தமிழ் மக்களுக்கு எதிராக உலகின் பெரும்பாலான நாடுகள் ஒன்றாக நின்றன. அல்லது ஈழத் தமிழர்களுக்கு எதிரான தரப்புக்களோடு நேரடியாகவோ மறைமுகமாகவோ கூட்டுச் சேர்ந்திருந்தன. ஐநா போரில் நேரடியாகத் தலையிடாமல் விட்டதன் மூலம் இனப்படுகொலையை மறைமுகமாக அங்கீகரித்தது.

இந்தியாவும் சீனாவும் பிராந்தியத்தில் ஒன்றுக்கொன்று நட்பு நாடுகள் அல்ல. ஆனால் இரண்டு நாடுகளுமே ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஒரே கோட்டில் நின்றன. இந்தியாவும் பாகிஸ்தானும் பிராந்தியத்தில் எதிரிகள். ஆனால் ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஒரே கோட்டில் நின்றன. சீனாவும் அமெரிக்காவும் உலக அளவில் நட்பு நாடுகள் அல்ல. ஆனால் ஈழத் தமிழர்களுக்கு எதிராக இரண்டும் ஒன்றாக நின்றன. உலகில் பிராந்திய மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் தங்களுக்கு இடையே பகைவர்களாகக் காணப்படும் நாடுகள் ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஒன்றாக நின்றன. அப்பொழுது எந்த ஒரு நாடும் அதை இனப்படுகொலை என்று கூறவில்லை. இப்பொழுதும் எத்தனை நாடுகள் கூறுகின்றன? அனைத்துலக நீதியின் மீது நம்பிக்கையிழந்த பின்னரும்கூட கடந்த 15 ஆண்டுகளாக விடாமல் போராடும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக வழக்குத் தொடுக்க இக்கொடிய உலகில் யாருண்டு?



**நிலாந்தன்**

05ஆம் பக்கத் தொடர்ச்சி...

வவுனியா பிரதேச செயலர் பிரிவில் சேமமடுவில் இருந்து கொடிவைத்தகல்லுக்கு வரும் வழியில் சுமார் 350 புதிய குடியேற்றங்களுக்கு காணிகள் சுத்தப்படுத்தப்படுத்தப்பட்டு, இவர்களுக்கு சுமார் 1000 ஏக்கர் விவசாயக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இதேபோல் நெடுங்கேணி வடக்கில் கரப்புக்குத்தி 10 ஏக்கர், கனகராஜன்குளம் பெரியகுளம் 25 ஏக்கர், மருதோடை 15 ஏக்கர், ஒலுமடு ஓடைவெளி 20 ஏக்கர், புளியங்குளம் இராமனூர் 15 ஏக்கர், கனகராஜன்குளம் குறிசுட்டகுளம் 10 ஏக்கர், குளவிசுட்டான் வேலன்குளம் 15 ஏக்கர் ஆகிய நிலம் அபகரிக்கப்பட்டுள்ளது. வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மதியாமடுவுக்கும் நயினமடுவுக்கும் இடையில் சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் எமது மக்கள் கால்நடைகளின் மேய்ச்சல் தரையாக பாவித்த 500 ஏக்கர் நிலம் சிங்களத் தொழிலதிபருக்கு 100 வருடக் குத்தகைக்கு வழங்கப்பட்டு காணி முழுவதும் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேடைப் பேச்சுக்களில் இவற்றைக் குறித்துப் பேசும் தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கு ஏற்ற நடவடிக்கையை உடனடியாக எடுக்கவேண்டும். இல்லையெனில் தமிழ் மக்கள் மீண்டும் அரசுக்கு எதிராக கிளர்ந்தெழவேண்டிய நிலை உருவாகும். அது சர்வதேச அளவில் கொண்டுசெல்லப்படுமாயின் இலங்கை அரசாங்கத்துக்கு அது தொடர் சங்கடங்களை ஏற்படுத்தும் என்பதிலும் சந்தேகமில்லை. ஆகவே இப்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளையே சமாளிப்பதில் விழிபிதுங்கி நிற்கும் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு சொந்தமான நிலத்தை அபகரிப்பதில் கரிசனை காட்டாது எல்லா மக்களும் தனது நாட்டின் பிரஜைகளே. அனைவருக்கும் தமது சொந்த நிலத்தில் வாழும் சுதந்திரம் உள்ளது என்பதை உணர்ந்து கொண்டால் சரி.

06ஆம் பக்கத் தொடர்ச்சி...

சர்வதேச நாணய நிதியத்தின் சொந்த உள்ளக ஆய்வுகளே அதன் கொள்கைகள் நாடுகளின் கடன்களைக் குறைப்பதில் பொதுவில் பயனுறுதியுடைய விளைவுகளை ஏற்படுத்தவில்லை என்பதைப் புலப்படுத்துகின்றன.

2023 ஏப்ரலில் வெளியிடப்பட்ட நிதியத்தின் 'உலகப் பொருளாதார நோக்கு' என்ற அறிக்கையில் சிக்கனத் திட்டங்கள் கடன் விகிதங்களை ஒரு சராசரி அடிப்படையில் குறைக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது" என்று மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு (Human Rights Watch) 'சர்வதேச நாணய நிதியம் சிக்கன கடன் நிபந்தனைகளினால் உரிமைகள் மலினப்படுத்தப்படும் ஆபத்து அதிகரிக்கும் அசமத்துவம் குறைபாடுடைய நிவாரண முயற்சிகளும்' என்ற தலைப்பில் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருக்கிறது.

சிக்கன நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது அரசாங்கங்களும் நிதி நிறுவனங்களும் மனித உரிமைகள் மீதான தாக்கம் குறித்து மதிப்பீட்டைச் செய்யவேண்டும் என்று வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு வழிகாட்டல் கோட்பாடுகள் கூறுகின்றன. ஆனால், சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளும் நிபந்தனைகளும் அந்தக் கோட்பாடுகளுக்கு இசைவானவையாக இல்லை என்பதை அனுபவங்கள் உணர்த்துகின்றன.

**ஐ.எம்.எவ். கலகங்கள்**

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன்களைப் பெற்ற ஏனைய நாடுகளின் அனுபவங்களில் இருந்து இலங்கை அரசாங்கம் படிப்பினைகளைப் பெற்று நிதானமாக நடந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு இருப்பதாக தெரியவில்லை. அந்த நாடுகளில் மக்கள் மத்தியில் தோன்றிய அமைதியின்மையை 'சர்வதேச நாணய நிதியக் கலகங்கள்' (IMF Riots) என்றே அழைக்கப்படுகின்றன. இலங்கையும் அத்தகைய கலகம் ஒன்றைக் காணுமா இல்லையா என்பது அடுத்து வரும் நாட்களில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளிலேயே முற்றிலும் தங்கியிருக்கிறது.

## கல்வி நடவடிக்கைகளை சுமூக நிலைக்கு கொண்டு வர பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் அவசரமாக புனரமைக்கப்பட வேண்டும்

அண்மையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக வெகுவாக பாதிக்கப்பட்ட தென்கிழக்கு பல்கலைக்கழகம் உள்ளிட்ட இடங்களை பார்வையிட்டு பாதிக்கப்பட்ட பிரதேசங்களை வழமை நிலைக்கு கொண்டு வரும் நோக்கில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம உள்ளிட்ட குழுவினர் (20) அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம உள்ளிட்ட குழுவினருடன் அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி.அனீஸ், ஜனாதிபதி செயலக உயர் மட்ட அதிகாரி ஆர்.நிசாந்தன், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் ஷாபிர், மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எச்.ஏ.அஹ்மத், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சி. எம்.றியாஸ் மற்றும் உலக உணவுத்திட்டத்தின் உயர்மட்ட அதிகாரிகளான சந்த்ரதிலக்க வீரசிங்க, டப்ளியு.எஸ்.ஐ.பெனாண்டோ, ஜெ.ஹெட்டியாராச்சி, எம்.நிஹ்மத் ஆகியோருடன் இன்னும் பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்த குழுவினர் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் மற்றும் பல்கலைக்கழக பொறியியலாளர் எம்.எஸ்.எம். பஸில் ஆகியோருடன் விரிவான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதுடன் பாதிக்கப்பட்ட இடங்களையும் பார்வையிட்டனர்.

இங்கு கருத்து தெரிவித்த உபவேந்தர் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை சுமூக நிலைக்கு கொண்டு வர பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அவசரமாக புனரமைக்கப்பட வேண்டும் என்றும் எதிர்காலத்தில் இவ்வாறான அனர்த்தங்களில் இருந்து பல்கலைக்கழகத்தை பாதுகாக்க விரிவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம, தங்களது மாவட்ட செயலக மட்டத்தில் முடியுமான அனைத்து உதவிகளையும் செய்வதாகவும் உறுதியளித்தார். **(நூருல் ஹுதா உமர்)**

11ஆம் பக்கத் தொடர்ச்சி...

எஞ்சியோரை அடிமைப்படுத்தி வேலை வாங்கும் அவர்களது முயற்சி தோல்வியடைந்ததும் பூர்வீகக்குடிகளின் பிணக்குவியல் மீது தமது வெள்ளைக் குடியேற்றங்களை நிறுவுவதும், கைப்பற்றிய ஆபிரிக்க நாடுகளில் இருந்து கறுப்பர்களை ஆடு மாடுகளைப்போல பிடித்துக்கொண்டு போய், அங்கெல்லாம் பெருந்தோட்டங்களை உருவாக்கி அடிமைகளாக அவர்களிடம் குரூரமாக வேலைவாங்குவதும் அப்போதைய போக்காக இருந்தது. நாளடைவில் இதன்மூலம் அதீத லாபம்தரும் முக்கோண வியாபாரம் (Transatlantic Slave Trade) ஒன்று உருவானது. ஐரோப்பாவிலிருந்து ஆயுதங்களும், துணியும், வைனும் ஆபிரிக்க நாடுகளுக்கு கப்பல்களில் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து அடிமைகளை அமெரிக்காவுக்கு ஏற்றிச்சென்று அங்கிருந்து சீனி, புகையிலை மற்றும் ஏனைய கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை ஐரோப்பாவுக்கு கொண்டுவரும் வர்த்தகம் இவ்வாறு தழைத்தோங்கியது. பிரித்தானியர் இலங்கையை கைப்பற்றி கோப்பிப் பெருந்தோட்டத்தை (1823) உருவாக்கிய 10 வாரடன்கள் கழித்த பின்னரே 1833 இல் பிரித்தானிய சாம்ராஜ்யத்தில் பழைய அடிமைமுறை ஒழிக்கப்பட்டது.

இலங்கை 1505 முதல் 1948 வரை 443 நீண்ட வருடங்கள் மூன்று மேற்கத்தைய நாடுகளின் காலனியாகக் கிடந்தது. முதலில் போர்த்துக்கேயர் 1505 முதல் 1658 வரை இலங்கையை தமது காலனித்துவ ஆட்சியின் கீழ் வைத்திருந்தனர். அவர்களிடமிருந்து நாட்டைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் 1658 முதல் 1796 வரை தமது காலனித்துவ ஆட்சியின் கீழ் வைத்திருந்தனர். திருகோணமலைத் துறைமுகம் 1796 இல் சில மாதங்கள் பிரெஞ்சுக் கட்டுப்பாட்டில் இருந்தது. 1796 முதல் 1948 வரை ஆங்கிலேயரின் காலனித்துவப் பிடிக்குள் வந்தது. 1815 இல் பிரித்தானியர்கள் முழுத் தீவையும் கைப்பற்றும் வரை இலங்கையின் கரையோரப் பகுதிகள் மட்டுமே காலனித்துவப்படுத்தப்பட்டன.

ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல இலங்கைக்கு வெளிநாட்டு ஆக்கிரமிப்பும் சரி வெளிக்காரணிகளின் ஊடுருவல்களும் சரி புதியவை அல்ல. ஆனால் இந்நாடு அவர்களால் கொள்ளையடிக்கப்பட்டது, எம்மக்கள் லட்சக்கணக்கில் கொல்லப்பட்டார்கள், அவர்களது உடமைகள் தீ வைக்கப்பட்டன போன்ற காரணத்தை ஒதுக்கிவிட்டு பார்த்தால் கூட, அவை அனைத்தும் ஏற்படுத்திய மாற்றங்களைவிட ஐரோப்பிய காலனித்துவவாதிகளின் ஆட்சி ஏற்படுத்திய மாற்றங்கள் ஆழமானவை, அடிப்படையானவை, அளவிலும் குணாம்சத்திலும் பாரியவை. ஏனெனில், முதலாவதாக, எந்த ஒரு வெளிநாட்டு சக்தியும் இவ்வளவு நீண்டகாலம் இதற்கு முன்னர் இலங்கையை ஆட்சி செய்ததில்லை.

இரண்டாவதாக, இலங்கையின் பெரும் நிலப்பரப்பை இதற்கு முன்னர் நிலையாக ஆட்சி செய்ததில்லை. மூன்றாவதாக, அனைத்துக்கும் மேலாக முற்றிலும் மாறுபட்ட (முதலாளித்துவ) பொருளாதார முறையையும், கிறிஸ்தவ மதத்தையும், மொழியையும், கலாசாரத்தையும், சட்டத்தையும், நிர்வாகமுறையும், ஆட்சிமுறையும் அறிமுகப்படுத்தி இலங்கையின் அடிப்படைத் தன்மையையே தலைகீழாக இது மாற்றிவிட்டது. 443 நீண்ட வருடங்கள் நிகழ்ந்த இம்மாற்றங்கள் 152 வருட பிரிட்டிஷ் ஆட்சியின் (1796-1948) கீழ்தான் துரிதம் பெற்றன. அளவிலும் குணாம்சத்திலும் இவை பாரிய தாக்கங்களை ஏற்படுத்தின.

இன்றைய தலைமுறை காணுகின்ற குறை அபிவிருத்தி - நவீனத்துவமாகட்டும் இன்று நாம் முகம்கொடுக்கின்ற அரசியல் பொருளாதார சமூக பிரச்சினைகளாகட்டும் அனைத்தினதும் மூலவேரை காலனித்துவ ஆட்சியில்தான் குறிப்பாக பிரித்தானிய காலனித்துவத்தில் தான் காணமுடியும். இத்தகைய பாரிய மாற்றங்கள் பெருந்தோட்டப் பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே ஏற்படுத்தப்பட்டன.

# பொன்மொழிகள்

*ஒரு முட்டாள் மகிழ்ச்சியைத் தொலைவில் தேடுகிறான், ஒரு ஞானி அதைத் தன் காலடியில் வளர்க்கிறான். - ஜேம்ஸ் ஒபன்ஹெய்ம்*

*மகிழ்ச்சியின் ரகசியம் சுதந்திரம், சுதந்திரத்தின் ரகசியம் தைரியம். - கேரி ஜோன்ஸ்*

*மகிழ்ச்சியான நபராக இருப்பதே வாழ்க்கையின் திறவுகோல் என்று நான் நினைக்கிறேன், மகிழ்ச்சி உங்களுக்கு வெற்றியைத் தரும். - டியாகோ வால்*

*மகிழ்ச்சிக்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது, அது நம் சக்திக்கு அப்பாற்பட்ட விடயங்களைப் பற்றி கவலைப்படுவதை நிறுத்துவதாகும். - எபிக்டெட்டஸ்*

*உண்மையான மகிழ்ச்சி என்பது, எதிர்காலத்தைப் பற்றிய கவலையில்லாமல் நிகழ்காலத்தை அனுபவிப்பதே. - செனிக்கா*

*ஒரு மேசை, ஒரு கதிரை, ஒரு கிண்ணம் நிறைய பழங்கள் மற்றும் ஒரு வயலின், ஒரு மனிதன் மகிழ்ச்சியாக இருக்க வேறு என்ன வேண்டும்? - ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்*

*ஏற்றுக் கொள்வதில் மட்டுமே மகிழ்ச்சி இருக்க முடியும். - ஜார்ஜ் ஆர்வெல்*

*இன்று என்னை மகிழ்விக்கும் அல்லது மகிழ்ச்சியற்றதாக்கும் ஆற்றல் நிகழ்வுகளுக்கு இல்லை. அது எதுவாக இருக்க வேண்டும் என்பதை என்னால் தேர்வு செய்ய முடியும். நேற்று என்பது முடிந்துவிட்டது, நாளை என்பது இன்னும் வரவில்லை. எனக்கு இன்று ஒரு நாள் மட்டுமே உள்ளது, அதில் நான் மகிழ்ச்சியாக இருக்கப் போகிறேன். - க்ரூச்சோ மார்க்ஸ்*

*மற்றவர்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சியை ஏற்படுத்த முயற்சிப்பதே மிகவும் மதிப்புமிக்க விடயம். - ராபர்ட் பேடன் பவல்*

*செயல் எப்போதும் மகிழ்ச்சியைக் கொண்டுவராது. ஆனால் செயல் இல்லாமல் மகிழ்ச்சி இல்லை. - பெஞ்சமின் டிஸ்ரேலி*

*எனக்குத் தெரிந்த அரிதான விடயம் அறிவாளிகளிடத்தில் மகிழ்ச்சி. - எர்னஸ்ட் ஹெமிங்வே*


*மகிழ்ச்சி என்பது ஒரு முத்தம் போன்றது. அதை அனுபவிப்பதற்கு அதை நீங்கள் பகிர வேண்டும். - பெர்னார்ட் மெல்ட்ஸர்*

*அதிகளவு மகிழ்ச்சியை எதிர்பார்ப்பதே மகிழ்ச்சிக்கு ஒரு மிகப் பெரிய தடையாகும். - பெர்னார்ட் டி ஃபோன்டெனெல்லே*

*நாம் நம்பும் விடயங்கள் நாம் செய்யும் விடயங்களிலிருந்து வேறுபட்டால் அங்கே மகிழ்ச்சி இருக்காது. - ஃப்ரேயா ஸ்டார்க்*

# விளையாட்டுச் செய்திகள்

## சானியா மிர்சா - சோயிப் மாலிக் விவாகரத்து : வலுசேர்க்கும் சானியாவின் Instagram



முன்னாள் இந்திய டென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்சாவின் விவாகரத்து மீண்டும் ஒருமுறை வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இதற்கு காரணம் அவரது சமீபத்திய இன்ஸ்டாகிராம் பதிவு. பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான சோயிப் மாலிக்கை விவாகரத்து செய்யப் போகிறார் என்ற செய்திக்கு இந்தப் பதிவு மேலும் வலு சேர்த்துள்ளது.

சானியா தனது Instagram Storiesல் மேற்கோள் ஒன்றைப் பகிர்ந்துள்ளார். அதில், "கல்யாணம் கடினம்.. விவாகரத்தும் கடினம்.. குண்டாக இருப்பதும் கடினம்.. ஃபிட்டாக இருப்பதும் கடினம்.. கடனில் சிக்குவது கடினம்.. பொருளாதார ஒழுக்கத்தை கடைப்பிடிப்பதும் கடினம்.. தொடர்புகொள்வதும் கடினம்., தொடர்பு கொள்ளாமல் இருப்பதும் கடினம்... இவற்றில் எதை தேர்வு செய்கிறீர்கள்? வாழ்க்கை எப்போதும் எளிதானது அல்ல. இது எப்போதும் கடினம் தான். ஆனால்.. அது நம் கையில்தான் உள்ளது. புத்திசாலித்தனமான முடிவுகளை எடுக்கவேண்டும்" என்று ஒரு மேற்கோளைப் பகிர்ந்துள்ளார்.

சானியா மிர்சா சோயிப் மாலிக்கை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இவர்களது திருமணம் கடந்த 2010ம் ஆண்டு ஹைதராபாத்தில் பிரமாண்டமாக நடந்தது.

2018ல், அவர்களுக்கு இசான் என்ற மகன் பிறந்தான். கடந்த இரண்டு வருடங்களாக சானியாவும் சோயப்பும் பிரிவதாக செய்திகள் வெளியாகின. இதற்கு இருவரும் இதுவரை நேரடியாக பதிலளிக்கவில்லை.

பாகிஸ்தான் நடிகை ஆயிஷா உமருடன் மாலிக்கின் திருமணத்திற்கு புறம்பான தொடர்பு தொடர்வதாக செய்திகள் வந்தபோது, அந்த செய்தியை ஆயிஷா மறுத்தார். இவர்கள் இருவரும் பிரிந்து வாழ்வதும் வதந்திகளுக்கு மேலும் உத்வேகத்தை அளித்து வருகிறது.

சமீபத்தில் சானியா மிர்சா தனது சமூக ஊடக கணக்குகளில் இருந்து சோயப் மாலிக்கின் புகைப்படங்களை நீக்கினார் மற்றும் சோயப் தனது ட்விட்டர் கணக்கில் இருந்து சானியா மிர்சாவின் பெயரையும் நீக்கினார். சமீபத்தில், சானியாவின் இன்ஸ்டாகிராம் ஸ்டோரி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

## இலங்கை வீரர்கள் முன்னேற்றம்




*இலங்கையின் வனிந்து ஹசரங்கா, மஹீஷ் தீக்ஷணா டி20 தரவரிசையில் டொப் 3 இடத்தை பிடித்துள்ளனர்.*

*ஐசிசி டி20 கிரிக்கெட்டுக்கான தரவரிசைப் பட்டியல் வெளியாகியுள்ளது.*

*பந்துவீச்சாளர்களுக்கான Top 10 பட்டியலில் இலங்கை சுழற்பந்து வீச்சாளர்களான வனிந்து ஹசரங்கா, மஹீஷ் தீக்ஷணா இருவரும் நல்ல முன்னேற்றங்களை அடைந்துள்ளனர்.*

*அதாவது 680 புள்ளிகளை பெற்றுள்ள ஹசரங்கா ஒரு இடம் முன்னேறி 3வது இடத்தையும், அதே புள்ளிகளைபெற்றிருப்பதால்தீக்ஷணா 2 இடங்கள் முன்னேறி 3வது இடத்தையும் பிடித்துள்ளனர்.*

*அதேபோல் ஒருநாள் தரவரிசையில் தீக்ஷணா (648 புள்ளிகள்) மூன்று இடங்கள் முன்னேறி 8வது இடத்தை பிடித்துள்ளார்.*

*ஆனால் ஓல்ரவுண்டர் பட்டியலில் ஹசரங்கா 7வது இடத்தில் (175 புள்ளிகள்) நீடிக்கிறார்.*

*ஐசிசி தரவரிசைப் பட்டியலில் அடில் ரஷீத் (டி20), கேஷவ் மஹாராஜ் (ஒருநாள்) மற்றும் ஷாகிப் அல் ஹசன் (டி20 ஓல்ரவுண்டர்) ஆகியோர் முதலிடம் பிடித்துள்ளனர்.*

## பிபா விருதை வென்ற மெஸ்ஸி



*கால்பந்து ஜாம்பவான் லியோனல் மெஸ்ஸி 2023ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரர் விருதை வென்றுள்ளார். லண்டனில் 2023 ஆம் ஆண்டுக்கான பிபாவின் சிறந்த விருதுகள் விழா நடந்தது. இதில் சிறந்த வீரர் விருதை பெறுபவர் யார் என்பதில் மெஸ்ஸிக்கும், எர்லிங் ஹொலண்ட்கும் இடையே கடும் போட்டி நிலவியது.*

*இருவருமே 48 புள்ளிகள் பெற்றிருந்தனர். ஆனால், அதிக தேசிய அணியின் கேப்டன்கள் மெஸ்ஸிக்கு வாக்களித்ததால் அவர் விருதினை தட்டிச் சென்றார். கடந்த நான்கு ஆண்டுகளில் அவர் மூன்றாவது முறையாக இந்த விருதை பெற்றுள்ளார்.*

*சிறந்த அணியின் மேலாளர் விருதை மான்செஸ்டர் சிட்டியின் பெப் கார்டியோலா வென்றார். சிறந்த கோல் கீப்பர் விருதை மான்செஸ்டர் சிட்டியின் எடர்சன் வென்றார். சிறந்த வீராங்கனை விருதை ஸ்பானிஷின் Aitana Bonmati வென்றார்.*

## சிறந்த வீரர் விருதை வென்ற உலகக்கோப்பை கேப்டன்



அவுஸ்திரேலிய கேப்டன் பேட் கம்மின்ஸ் டிசம்பர் மாதத்தின் சிறந்த வீரர் விருதை வென்றார். ஐசிசி கடந்த டிசம்பர் மாதத்திற்கான சிறந்த வீரர், வீராங்கனைகளுக்கான விருதுகளை அறிவித்துள்ளது. அதன்படி, சிறந்த வீரர் விருதை அவுஸ்திரேலிய கேப்டன் பேட் கம்மின்ஸ் கைப்பற்றினார். அவர் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் வெற்றியில் சிறப்பாக பந்துவீசி பங்களித்திருந்தார்.

இது முதல் முறையாக பேட் கம்மின்ஸ் பெறும் விருது ஆகும். முன்னதாக கம்மின்ஸ் கூறும்போது, "எல்லா வடிவங்களிலும் எங்கள் அணிக்கு இது ஒரு சிறந்த ஆண்டாகும் (2023). ஒட்டுமொத்தமாக நங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறோம். நியூசிலாந்து மற்றும் வெஸ்ட் இண்டீஸ் அணிகளை எதிர்நோக்குகிறோம்" என தெரிவித்தார். மகளிர் கிரிக்கெட்டை பொறுத்தவரை, இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா அணிகளுக்கு எதிராக சிறப்பாக செயல்பட்ட தீப்தி சர்மா சிறந்த வீராங்கனையாக முதல் முறையாக தெரிவு செய்யப்பட்டார்.

## இந்தியாவை மரண பயத்தில் வைத்திருந்த ஆப்கானிஸ்தான்

இந்தியா - ஆப்கானிஸ்தான் இடையேயான இறுதி டி20 போட்டியை இந்தியா வென்று 3-0 என்ற கணக்கில் கோப்பையைக் கைப்பற்றியுள்ளது. பெங்களூரில் நடைபெற்ற போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட்ட முடிவு செய்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 212 ஓட்டங்கள் குவித்தது. துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக அணி தலைவர் ரோஹித் சர்மா 121 ஓட்டங்களையும், ரிங்கு சிங் 69 ஓட்டங்களையும் எடுத்தனர். இதையடுத்து, 213 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

இறுதியில் ஆப்கானிஸ்தான் 20 ஓவர்கள் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 212 ஓட்டங்களை எடுத்தது. இதன் மூலம் ஆட்டம் "டை" ஆனது. இதனை தொடர்ந்து சூப்பர் ஓவர் முறையில் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, சூப்பர் ஓவரில் முதலில் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் 1 ஓவரில் (6 பந்துகள்) ஒரு விக்கெட் இழப்பிற்கு 16 ஓட்டங்களை குவித்தது.

தொடர்ந்து களமிறங்கிய இந்தியா 1 ஓவரில் 16 ஓட்டங்கள் எடுத்தது. இதனால், சூப்பர் ஓவரும் டை ஆனது. இதையடுத்து, வெற்றியை தீர்மானிக்க 2வது சூப்பர் ஓவர் வீசப்பட்டது. இதில், முதலில் பேட்டிங் செய்த இந்தியா 2வது சூப்பர் ஓவரில் 11 ஓட்டங்கள் எடுத்தது.

இதையடுத்து, 6 பந்துகளில் 12 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் முதல் 3 பந்துகளில் ஒரு ஓட்டம் மட்டுமே எடுத்து 2 விக்கெட்டுகளை இழந்தது. இதனால், ஆப்கானிஸ்தானை 2வது சூப்பர் ஓவரில் 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா வெற்றி பெற்றது.

# உலக வலம்

## கனடாவில் தொழில் வாய்ப்பு மோசடிகள் அதிகரிப்பு




கனடாவில் போலி தொழில் வாய்ப்பு குறித்த மோசடிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நாடு முழுவதிலும் தொழில் வாய்ப்பு வழங்குவதாக போலியாகக் கூறி மக்கள் ஏமாற்றப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையிலான மோசடிகள் இணைய வழியில் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொழில் வாய்ப்பு வழங்குவதாகக் கூறி, போலி காசோலைகள் மூலம் மோசடிகள் இழைக்கப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடந்த 2022ம் ஆண்டில் தொழில் வாய்ப்பு வழங்குவதாகக் கூறி கனேடியர்களிடமிருந்து 7,218,534 டொலர்கள் மோசடி செய்யப்பட்டுள்ளதுடன் 2023ம் ஆண்டில் 27,682,309 டொலர்கள் மோசடி செய்யப்பட்டுள்ளது.

கனேடிய மோசடி தவிர்ப்பு நிலையத்தினால் இந்த புள்ளிவிபரத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. போலி காசோலைகள் மூலம் மேற்கொள்ளப்படும் மோசடிகளுக்கு வங்கிகளும் பொறுப்பேற்கப் போவதில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இணைய வழியில் தொழில் வாய்ப்பு வழங்குவதாக செய்யப்படும் விளம்பரங்கள் தொடர்பில் கூடுதல் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## ஆசியக் குழந்தைகளை பராமரிப்பதில் மிகப்பெரும் சவால் - யுனிசெப்



ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியாவில் ஏறக்குறைய 4,56,000 குழந்தைகள் பெரிய நிறுவனங்கள் உட்பட பராமரிப்பு வசதிகளில் வாழ்கின்றனர் என்று (19.01.2024) அன்று வெளியிட்டுள்ள புதிய அறிகையொன்றில் தெரிவித்துள்ளது யுனிசெப் (UNICEF) நிறுவனம். இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியாவிற்கான UNICEF நிறுவனத்தின் மண்டல இயக்குனர் Regina De Dominicis அவர்கள், ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியாவில் குழந்தைகளை நிறுவனமயமாக்கும் நீண்ட மற்றும் வலிமிகுந்த பாரம்பரியத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு நாம் இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது என்று கவலை தெரிவித்துள்ளார்.

குழந்தைகளைப் பராமரிப்பதில் குறிப்பிடத்தக்க சில முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், அது சமமாக இல்லை என்றும், குறைபாடுகள் உள்ள குழந்தைகள் பெரும்பாலும் பின்தங்கியுள்ளனர் என்றும் எடுத்துக்காட்டியுள்ளார் ரெஜினா. "சிறந்த பாதுகாப்பிற்கான பாதைகள்: ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியாவில் மாற்றுப் பராமரிப்பில் உள்ள குழந்தைகளின் நிலைமையை ஆய்வு செய்தல்" என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியாவில் மாற்றுப் பராமரிப்பில் வாழும் குழந்தைகளின் விழுக்காட்டு விகிதம் உலக சராசரியை விட இரு மடங்காகும் என்று தெரிவிக்கும் அவ்வமைப்பு, உலகளவில் 1,00,000க்கு 105 குழந்தைகளுடன் ஒப்பிடும்போது 1,00,000 குழந்தைகளில் 232 பேர் வளர்ப்புப் பராமரிப்பில் வாழ்கின்றனர் என்றும், 2017இல் இத்தாலியில் 1,00,000 க்கு 130 பேர் இருந்தனர், அதேவேளையில் குடும்ப வளர்ப்பில் இருப்பவர்கள் 1,00,000 க்கு 144 பேர் என்றும் கூறுகிறது.

மேற்கு ஐரோப்பாவில் பராமரிப்பு வசதிகளில் குழந்தைகளின் எண்ணிக்கை 1,00,000க்கு 294 என்ற விகிதத்தில் அதிகமாக உள்ளது என்றும், இது உலக சராசரியை விட ஏறக்குறைய மூன்று மடங்கு அதிகம் என்றும் சுட்டிக்காட்டும் அவ்வறிக்கை, மேற்கு ஐரோப்பாவில் உள்ள வசதிகள் சிறியதாகவும், சமூகக் குழுக்களில் ஒருங்கிணைக்கப்பட்டதாகவும் இருந்தாலும், குடும்ப அடிப்படையிலான கவனிப்பைக் காட்டிலும் குடியிருப்புகளின் அதிகப்படியான பயன்பாடு இன்னும் உள்ளது என்றும் எடுத்துரைக்கிறது. அண்மைய ஆண்டுகளில் ஐரோப்பாவிற்கு வந்துள்ள ஆதரவற்ற சிறார்களின் அதிகரிப்பு மற்றும் இளம் புகலிடக் கோரிக்கையாளர்களின் அதிகரிப்புமே ஐரோப்பாவில் பராமரிப்பு வசதிகளில் குழந்தைகளின் எண்ணிக்கை உயர்விற்குக் காரணமாகும் என்று மேலும் சுட்டுகிறது அவ்வறிக்கை.

## கடும் சரிவை கண்டுள்ள சீன மக்கள் தொகை

உலக மக்கள் தொகையில் முன்னணியில் இருந்துவந்த சீனா, கொவிட் தாக்கத்திற்கு பிறகு மக்கள் தொகையில் கடுமையான சரிவை சந்தித்தது. கொவிட் தொற்றால் லட்சக்கணக்கான மக்களை இழந்த சீனா, மக்கள் தொகையை பெருக்க பல்வேறு உத்திகளை கையாண்டது. அந்தவகையில் பிறப்பு விகிதத்தை கட்டுப்படுத்தும் திட்டத்தை தளர்த்தி, தற்போது மூன்று குழந்தைகள் வரை பெற்றுக்கொள்ளலாம் என அரசாங்கம் அனுமதி அளித்தாலும், பிறப்பு விகிதம் எதிர்பார்த்த அளவு உயரவில்லை.

அதேசமயம் 60 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 2022ல் சீனாவில் மக்கள் தொகை சரிவை சந்தித்தது. வருடாவருடம் அதிகரிக்கும் மக்கள் தொகை, சுமார் 20 லட்சம் அளவிற்கு ஒரே ஆண்டில் குறைந்தது.

2023லும் இந்த சரிவு தொடர்ந்ததால் சீன அரசு அதிர்ச்சியடைந்துள்ளது. தற்போதைய சீன மக்கள் தொகை 140.9 கோடி என அந்நாட்டின் தேசிய புள்ளியியல் துறை தெரிவித்துள்ளது.

இப்படியே பிறப்பு விகிதம் குறைந்துவந்தால், எதிர்காலத்தில் சீனாவில் வயதானவர்களே அதிகளவு இருப்பார்கள் என அச்சம் ஏற்பட்டுள்ளது. இது அந்நாட்டின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு பாதகமாக அமையலாம். இந்நிலையில், பிறப்பு விகிதத்தை அதிகரிக்க சீன அரசாங்கம் ஆலோசித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

## ஆப்பிள் நிறுவன கைக்கடிகாரங்களுக்கு தடை விதித்த அமெரிக்கா




ஐபோன், கணினி உள்ளிட்ட முன்னணி தொழில்நுட்ப சாதனங்களை தயாரிக்கும் நிறுவனம் ஆப்பிள். அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தை தலைமையிடமாக கொண்டு இந்த நிறுவனம் செயல்படுகிறது. இந்த நிறுவனத்தின் தயாரிப்புகளுக்கென்று ஒரு தனித்தன்மை மற்றும் ரசிகர் பட்டாளம் உள்ளது.

இதற்கிடையே ஆப்பிள் நிறுவனத்துக்கும், பிரபல மருத்துவ தொழில்நுட்ப நிறுவனமான மசிமோவுக்கும் இடையே காப்புரிமை தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டது. இது தொடர்பாக சர்வதேச வர்த்தக ஆணையத்தில் மசிமோ நிறுவனம் வழக்கு தொடுத்தது. இதில் மசிமோ நிறுவனத்தின் காப்புரிமையை ஆப்பிள் நிறுவனம் மீறியது கண்டுபிடிக்கப்பட்டது.

எனவே ஆப்பிள் சீரியஸ் 9 மற்றும் ஆப்பிள் அல்ட்ரா 2 ஆகிய ஸ்மார்ட் கைக்கடிகாரங்களை அங்குள்ள சில்லறை விற்பனையாளர்கள் விற்பனை செய்யலாம். அதேபோல் அமெரிக்கா தவிர மற்ற நாடுகளில் விற்பனை செய்ய எந்த தடையும் விதிக்கப்படவில்லை.

## பிரித்தானிய மன்னர் தற்காலிக விலகல்



உடல்நலக்குறைவு காரணமாக பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ல்ஸ் அரச பதவிகளில் இருந்து தற்காலிகமாக விலகியுள்ளார். இந்நிலையில் அடுத்த வாரம் மூன்றாம் சார்ல்ஸ் மன்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவார் என பக்கிங்ஹாம் அரண்மனை அறிவித்துள்ளது.

அதேவேளை, வேல்ஸ் இளவரசி கேட், வயிற்று அறுவை சிகிச்சைக்கு பிறகு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரது சத்திரசிகிச்சை வெற்றியடைந்துள்ளதாகவும், ஆனால் இன்னும் சில வாரங்களுக்கு அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவார் எனவும் பிரித்தானிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக இன்னும் சில மாதங்களுக்கு அவர் அரச விவகாரங்களில் இருந்து தற்காலிகமாக ஒதுங்கி இருக்க நேரிடும் எனவும் அந்த தகவல்கள் கூறுகின்றன.



## ஈரான் மீது திருப்பியடித்த பாகிஸ்தான்

ஈரான் மேற்கொண்ட தாக்குதலிற்கு பதிலடியாக ஈரானின் தீவிரவாதிகளை இலக்குவைத்து தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை (16) ஈரான் மேற்கொண்ட தாக்குதலை பாகிஸ்தான் கடுமையாக கண்டித்திருந்தது.

பாகிஸ்தான் - ஈரான் எல்லையிலுள்ள தீவிரவாத குழுக்களின் தளங்களை இலக்குவைத்து மேற்கொண்ட தாக்குதலிற்கு பதிலடியாக இந்த தாக்குதலை பாகிஸ்தான் மேற்கொண்டுள்ளது.

ஈரானின் சியஸ்டன் ஒபலோச்சிஸ்தான் மாகாணத்தில் உள்ள தீவிரவாதிகளின் மறைவிடங்கள் மீது தொடர்ச்சியான ஒருங்கிணைக்கப்பட்ட துல்லியமான தாக்குதல்களை பாகிஸ்தான் மேற்கொண்டுள்ளது என பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. மார்க் பார் சர்மசாச்சார் என்ற புலனாய்வை அடிப்படையாக கொண்ட நடவடிக்கையின் போது பல தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.



# உலகின் மிக உயரமான நட்சத்திர ஹோட்டல்

*ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் உள்ள உலகின் ஒரே 10 நட்சத்திர ஹோட்டல் புர்ஜ் அல் அரப் ஆகும். இது ஒரு செயற்கை தீவில் அமைந்துள்ளது.*

*புர்ஜ் அல் அரப் உலகின் மிக உயரமான ஹோட்டல்களில் ஒன்றாகும்.*

*புர்ஜ் அல் அரப் 1999 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இதன் கட்டுமான செலவு ஒரு பில்லியன் டொலர்களுக்கு மேல் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

# நண்டு காரை அறிமுகப்படுத்திய ஹூண்டாய் நிறுவனம்

*தனது நிறுவனத்தில் புதிதாக தயாரிக்கப்பட்ட காரை உலக மின்சாதன நுகர்வோர் கண்காட்சியில் ஹூண்டாய் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.*

*குறித்த புதிய "நண்டு காரின் அறிமுகம் தொடர்பில் தெரியவருவதாவது, ஹூண்டாயின் மோபிஸ் நெக்ஸ்ட் ஜெனரேசன் இ - கார்னர் தொழில்நுட்பம்* (Hyundai Mobis' next-generation e - Corner system) *மூலம் இந்த கார் தயாரிக்கப்பட்டுள்ளது.*

*குறித்த கார் நண்டைப் போல இயங்கக்கூடியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இணையத்தில் "நண்டு கார்" எனப் பிரபலமாகி வருகிறது.*

*எவ்வாறெனில் சாதாரண கார்களைப் போல் முன்னால் மற்றும் பின்னால் மட்டும் செல்லாமல், இடது மற்றும் வலது பக்கமும் நகர்கிறது.*

*சாதாரண கார்களில் முன்னால் இருக்கும் இரண்டு சக்கரங்களை மட்டுமே கட்டுப்படுத்தி வளைக்க முடியும். ஆனால் இந்த காரில் நான்கு சக்கரங்களையும் கட்டுப்படுத்த முடியும்.*

*ஒவ்வொரு சக்கரத்தையும் 90 டிகிரி வரை வளைக்கலாம். முந்தைய கார்களைப்போல் நீளமாக திரும்பத் தேவையில்லை, ஒரு பந்தினை சுற்றிவிடுவது போல், நின்ற இடத்திலேயே 360 டிகிரி கோணத்தில் இந்த கார் சுற்றுகிறது.*

*இந்த தொழில்நுட்பத்திற்கு "இன்-வீல்"* (In-wheel) *எனப் பெயரிட்டுள்ளது.*

# உருகும் பனிப்பாறையில் அழகிய வடிவங்கள்



முழுவதும் பனியால் சூழப்பட்ட, பனிப்பாறைகள் நிறைந்த அழகான கண்டமாக அன்டார்க்டிகா காணப்படுகின்றது. இங்கு மனிதர்கள் வசிப்பது முடியாததால், ஆராய்ச்சியாளர்களும், சுற்றுலா பயணிகளும் மட்டுமே சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

இங்குள்ள பனிப்பாறைகளில் மிக பெரியது, ஏ23ஏ (A23a). இந்த பனிப்பாறை 1986களிலேயே அப்பிரதேசத்தின் கடல் பகுதியிலிருந்து உடைந்து நகர்ந்து செல்ல தொடங்கியது.

சுமார் 30 ஆண்டுகளாக வெட்டல் கடல் (Weddell Sea) பகுதியின் ஆழத்தில் சிக்கி அங்கேயே நிலைநிறுத்தப்பட்டிருந்த ஏ23ஏ பனிப்பாறை, சுமார் 4 ஆயிரம் சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டுள்ளது.

அங்கு உள்ள பனி நீர் சுழற்சியால் தென் ஆர்க்னி தீவை (South Orkney Islands) நோக்கி இது மெதுவாக பயணிக்கத் தொடங்கியுள்ளது. பனிப்பாறையின் நகர்வை டிரோன் கெமரா மூலம் படம் பிடித்த நிபுணர் குழு ஒன்று அப்புகைப்படங்களை வெளியிட்டுள்ளது.

நாளாந்தம் சிறிதாக உருகும் ஏ23ஏ பனிப்பாறையில் மிக பெரிய வளைவுகளும், குகைகளும் இயற்கையாக உருவாகியுள்ளன. எப்பொழுது என உறுதியிட்டு கூற முடியாவிட்டாலும் சில ஆண்டுகளில் ஏ23ஏ முழுவதும் உருகி விடும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

---

*இதுபோன்ற வியத்தகு தொழில்நுட்பத்தை சிக்கலான கட்டுப்பாடுகளோடு கடந்த ஆண்டு தென்கொரியாவில் அறிமுகப்படுத்திய ஹூண்டாய் இப்போது மிகுந்த முன்னேற்றங்களுடன் இந்த காரை களமிறக்கியுள்ளது.*







இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 21.01.2024 அன்று வெளியிடப்பட்டது.